[illegible]

[illegible]

July 19[illegible]

SL
R673m211.N28
N34.7.7.
187097

213

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 7—No. 7.

213

11 JUL 1934

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் எ | பவ ஆண்டு ஆடித் திங்கள்<br>1934 ௵ ஜூலை௴ | இதழ் எ |

உள்ளுறை — பக்கம்

| | |
|---|---|
| நாயன்மார் தொகை ... ... | ௧௯௩ |
| வேள்வி ... ... ... | ௧௯௮ |
| சோழர் ஆட்சியில் முதன் முதல் திருப்பதிகம் பாட ஏற்பட்ட கல்வெட்டு ... ... | ௨௦௪ |
| திருவிசைப்பா ... ... ... | ௨௦௫ |
| அகிலாண்டேஸ்வரியின் திருவிளையாடல் ... | ௨௦௭ |
| திருநீற்றின் சிறப்பு ... ... ... | ௨௦௯ |
| சைவமும் தமிழும் ... ... ... | ௨௧௨ |
| பிறவிக்கடல் நீத்த பிரான் ... ... | ௨௧௬ |
| சைவம் ... ... ... | ௨௧௯ |
| திருவாசகம் உரையுடன் ... | ௪௧௭-௪௩௨ |
| சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... | ௯௭-௧௧௨ |

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.

உதவி ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

## திருமந்திரம்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகிய திருமந்திரம் வெளிவந்துவிட்டது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஷை கழகத்தமிழாராய்ச்சிப் பேராசிரியர் திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி., "கலைமகள்" இதழாசிரியக் கூட்ட உறுப்பினர் திரு. பி. என். அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்., ஆகிய மூன்று பேரறிஞர்களால் பல ஏட்டுப்பிரதிகளை ஒப்பு நோக்கிப் பதினாயிரம் பாடபேதங்கள் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளன. அரும்பதவுரை யகராதி, முதற் குறிப்பகராதி, திருமூலர் சரித்திர ஆராய்ச்சி, திருமந்திரத்திலுள்ள அதிகப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி முதலியன இந்நூலில் உள்ளன. இதுவரை இம்முறையில் இந்த நூல் அச்சிடப்படவில்லை. அழகிய கலிக்கோ கட்டிடம், 566 பக்கங்கள்.

**தனிப்பிரதி விலை ருபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு எட்டு.**

**பதினைரு பிரதிகள் விலை ருபா பத்து.** ரயில்வே பார்சல் மூலம் அனுப்பப் பார்சல் கட்டுக் கூலி, ரயில்வே ரசீதை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பத் தபாற் கூலி அணு 6.

---

## பதினொரந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்விய பிரபந்தங்கள் அடங்கியது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது. பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு.

**தனிப் பிரதி விலை அணு பதினொன்று ;**
**ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு ஆறு.**
**எட்டுப் பிரதிகள் விலை ருபா ஐந்து ;**
**ரிஜிஸ்தர் தபாற்கூலி ருபா ஒன்று அணு பத்து.**

---

## திரு அருட்பா—பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

கீர்த்தனைப் பகுதி 2-ம் பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| ஸ்வரப்படுத்தியது—முன்னுரையோடு கூடியது | 0 | 12 | 0 |
| ரிஜிஸ்தர் தபாற்கூலி | 0 | 5 | 3 |

வசனப் பகுதி 2-ம் பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவிண்ணப்ப மூலத்தின் போட்டோ பிளாக்கும் முன்னுரையும் கொண்டது | 0 | 15 | 0 |
| ரிஜிஸ்தர் தபாற் கூலி | 0 | 5 | 3 |

கிடைக்கும் இடம் : சைவசித்தாந்த மகா சமாஜம்
சென்னை.



Registered No. M. 2330.

# சித்தாந்தம்

| மலர் ௭ | பவ ஆண்டு ஆடித் திங்கள்<br>1934௵ ஜூலைமீ | இதழ் ௭ |
|---|---|---|


## நாயன்மார் தொகை


[பத்திராசிரியர்]


திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் (=பெரியபுராணம்) ஆகிய தொகை, வகை, விரிநூல்களிற் கூறப்படும் தொண்டர்களின் எண்ணிக்கையைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் சில உள்ளன. சாதாரண வழக்கில் தனியடியவர் அறுபத்துமூவரென்றும் தொகையடியவர் ஒன்பதின்மரென்றும் இவ்வெண்ணிக்கை கூறப்படுகின்றது. இக்கணக்கின்படி சடையனார், இசைஞானியார், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆகிய மூவரும் தனியடியவர் கணக்கில் சேர்க்கப்பெற்றும், பொய்யடிமையில்லாத புலவர் தொகையடிவர் கணக்கில் சேர்க்கப்பெற்றும் உள்ளார்கள். சில ஆராய்ச்சியாளர்கள் பொய்யடிமையில்லாத புலவரை மாணிக்கவாசகர் என்று தனியடியவர் கணக்கில் வைத்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளைநீக்கித் தனியடியவர் மொத்தம் அறுபத்துமூவரென்றும் தொகையடியவர் எண்மரென்றும் கொள்ளுகின்றனர். இதற்காதாரவாக வடமொழியி

னுள்ள உபமன்னியு பக்த விலாசமும் அகத்திய பக்த விலாசமும் பொய்யடிமையில்லாத புலவரைத் தனியடியவராகக் கூறும் கூற்று உளது. (இதுபற்றி அடுத்த இதழில் வெளிவரும்.) இப்பொருள்பற்றி நம்பியாண்டார்நம்பிகள் பொய்யடிமையில்லாத புலவர் சங்கப் புலவர் என்று அந்தாதியில் ஒருபாட்டில் கூறியதைத் தழுவாமலும் மறுக்காமலும் சேக்கிழார் மூன்று பாட்டில் பொதுப்படக் கூறியுள்ளது அறிஞருலகம் அறிந்ததொன்று.

திருத்தொண்டத்தொகையின் திருவாக்கை ஆராய்ந்து பார்க்கின், பெயரிட்டுக் கூறப்பட்டோர் (இவர்களைத் தனியடியவரெனக் கருதலாம்) அறுபது பேருக்கும், கூட்டமாகக் கூறப்பட்டோர் ஒன்பதின்மருக்கும் அடிமையென்று, சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் புதல்வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகின்றனர். ஈண்டு சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் அடிமை கூறப்படாமை நோக்கத்தக்கது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத் திருக்கடைக் காப்புப் பாசுரங்களில் நாவலூரன், ஆரூரன், வன்றொண்டன், சடையன் சிறுவன், இசைஞானி சிறுவன், சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்ற தமது பெயர்க் குறிப்புகளில் ஒன்றையோ பலவற்றை அடுக்காகவோ வைத்துக் கூறுவது வழக்கம். உதாரணமாகக் கலயநல்லூர் பதிகத்தில் "நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன் நாவலர்கோன் ஆரூரன்" என்றும், திருப்புகலூர் பதிகத்தில் "நாவலூரன் வனப்பகையப்பன் சடையன்றன் சிறுவன் வன்றொண்டனூரன்" என்றும், வாழ்கொளிப்புத்தூர் பதிகத்தில் "தமிழோன் வன்றொண்டன் சடையன் காதலன் வனப்பகையப்பன் நலங்கிளர்வயல் நாவலர்வேந்தன் நங்கை சிங்கடி தந்தை" என்றும், அதிகைவீரட்டானப் பதிகத்தில் "இசைஞானி சிறுவன்........நாவலூர்க்கோன் வன்றொண்டன் ஆரூரன்" என்றும் கூறியிருத்தல் காண்க. இவ்வாறே திருத்தொண்

18097



டத்தொகைத் திருக்கடைக் காப்பிலும் கூறினரெனக் கொள்வதே பொருத்தமாம்.

இஃதிவ்வாறாயின் நம்பியாண்டார் நம்பிகள் அந்தாதியில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் பாடல்கள் பாடியிருப்பதேன் என்ற வினா எழுவதியல்பு. நம்பிகள் திருத்தொண்டத்தொகையைப் பீடிகையாகக் கொண்டு பாடினர். சடையனார் இசைஞானியார் இருவர்க்குமே யன்றி திருத்தொண்டத்தொகையில் ஒவ்வொரு பாட்டின் கடைசியடியில் "ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே" என்றிருப்பதால் அவ்வவ்விடங்களில் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கும் ஒவ்வொரு பாடலும் பாடியுள்ளார். இம்முறையைப் பின்பற்றியே சேக்கிழார் பெருமானும் சருக்கங்களின் இறுதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பாடல்கள் பாடியுள்ளார். சடையனார், இசைஞானியார் ஆகிய இருவர்க்கும் திருத்தொண்டர் புராணத்தில் பாடல்களிருத்தலால் அவர்கட்கும் சுந்தரமூர்த்திசுவாமிகள் சரிதம் அப்புராணத்திலிருப்பதால் அவருக்கும் திருத்தொண்டர் புராணசாரத்தில் பாடல்கள் உள்ளன. இதனால் சடையனார், இசைஞானியார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் திருத்தொண்டர்கள் மொத்த எண்ணிக்கையில் சேர்ந்தவர்களெனப் பிற்காலத்தவரால் கருதப்பட்டுவிட்டனர். ஆனால் சேக்கிழார் புராணம் பாடிய ஆசிரியர் (இவர் உமாபதி சிவாசாரியர் என்று கூறப்படுகிறார்) இவ்வாறு கருதவில்லை.

சேக்கிழார் புராணம் அல்லது திருத்தொண்டர் புராண வரலாறு என்ற நூலில் தனியடியார் தொகை அறுபதென்றும் தொகையடியார் ஒன்பதின்மர் என்றும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது நோக்கத்தக்கது. ஷை புராணம் ௩௯-வது பாட்டில் (சமாஜப் பதிப்பில் ௫௬௬-ம் பக்கம்) "அறுபது பேர் தனிப்பேர் தம்மில் பதின்மூவர் வேளாளர் பகருங்

காலே'' என்றும், ௫௨-வது பாட்டில் (சமாஜப் பதிப்பில் ௫௭௦-ம் பக்கம்) அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்டம் ஒன்பதாக அறுபத்தொன்ப தாரனடியார் கதையை'' என்றும் கூறப்பட்டிருத்தல் காண்க. மேலும் இப்புராணத்தில் மரபு வரிசையாக இத்தனை இத்தனை அடியவர் மரபறியாதார் இத்தனை பேர் என்ற கணக்கும் ௩௬ - ௪௨ பாடல்களில் கொடுக்கப்பட்டுளது. மொத்தம் எண்ணினால் அறுபத்தொன்பதுதான் கிடைக்கிறது. ஆங்கு திருமறையோர் பதின்மூவரென்றும் சிவவேதியர் இருவரென்றும் கூறப்பட்டுளது; இன்னாரின்னாரென்ற விவரமும் உளது. இவ்விரு வகுப்பிலும் சடையனார், இசைஞானியார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவருமில்லை. மேலும் ௪௩, ௪௪, ௪௫-ம் பாடல்களில் குருவருளால் முத்தி பெற்றவர் பதினொருவர், சிவலிங்கத்தால் முத்தி பெற்றவர் முப்பதுபேர், அடியார் வழிபாட்டால் முத்தி பெற்றவர் பத்தொன்பதுபேர் (ஆக மொத்தம் குருலிங்க ஜங்கமங்களால் முத்தி பெற்றவர் $11+30+19=60$) என்று தெளிவாகக் கூறப்பட்டுளது. ஒவ்வொரு பகுதியிலுள்ளவர்கள் பெயர்களுங் குறிக்கப்பட்டுள்ளன. ஈண்டும் சடையனார், இசைஞானியார், சுந்தரர் ஆகிய மூவரும் சேர்க்கப்பட்டிலர். எனவே, சேக்கிழார் புராண ஆசிரியர் கருத்து நாயன்மார் தொகை அறுபது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அவ்வாசிரியர் காலத்தில் நாயன்மார் தொகை அறுபத்துமூன்று என்று இருக்குமாயின் அவர் அக்கொள்கையை வெட்டிக் கூறியிருத்தல் வேண்டும், இன்றேல் அதையொட்டியே தாமும் ௬௩ எனக் கூறி யிருத்தல் வேண்டும்.

இப்புராண ஆசிரியர் உமாபதி சிவாசாரியாரெனக் கொண்டால் இவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகட்கு முந்தியதாகும். அக்காலத்துக்குப் பிறகு,



திருக்கோயில்களில் நாயன்மார்கள் திருவுருவச் சிலைகள் நாட்டப்பெற்றகாலை, சடையனார், இசைஞானியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய மூவர்க்கும் சிலைகள் நாட்டப்பெற்றன. பொதுவாக அவர்களையும் நாயன்மார்களோடு சேர்த்து எண்ணும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இப்பழக்கத்தையும் நம்பிகள் அந்தாதி, சேக்கிழார் பெரியபுராணம், புராணசாரம் ஆகிய மூன்றிலும் இம்மூவர் சரிதமும் கூறப்பட்டிருத்தலையும் ஆதாரமாகக் கொண்டு நாயன்மார் தொகை அறுபத்து மூன்று என்ற கணக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இந்தக் கணக்கைத் திருத்தொண்டர் புராணசாரத்திற் புகுத்த எந்த நூற்றாண்டிலோ ஒருவர் எண்ணினார். நமது சமாஜப் பதிப்பில் ௫௫௮ - ௫௫௬-ம் பக்கங்களிற் காணப்படும் செய்யுள்களைப் பாடினார். $63+9=72$ என்ற கணக்கையும், சிவமறையோர் நால்வர் என்ற கணக்கையும் சேர்த்தார். "சைவப் பெருமான் (=சுந்தரர்), நற்சடையர், இசைஞானி, புகழ்த்துணையார் ஒருநால்வர் சிவமறையோர்'' என்றும் தெளிவு படுத்தினார். உமாபதி சிவாசாரியரே புராணசாரம் இயற்றியவரென்றும் கூறினார். ஆனால் சேக்கிழார் புராணத்திலுள்ள கணக்கு வேறென்று கூறி, தமது புதுக்கணக்கு வந்த காரணத்தையும் கூறினாரில்லை.

இப்புதுக்கணக்கை யொட்டியே திருத்தொண்டர் திருநாமக் கோவை, திருத்தொண்டர் திருநக்ஷத்திரக் கோவை பாடியவர் அறுபத்துமூன்று தனியடியார் பெயர்களைக் குறிக்கிறார். பல தலபுராணங்களிலும் அறுபத்துமூவர்க்குத் தோத்திரம் கூறப்பட்டுள்ளது. இப்போது அறுபத்துமூவர் உத்ஸவமும் பல தலங்களில் நடக்கிறது.

இக்கட்டுரையை நோக்கும் ஆராய்ச்சியாளர்கள் இப்பொருள்பற்றிய தங்கள் கருத்துக்களைப் பலசான்றுகளுடன் சிறு கட்டுரைகளாக எழுதி நமக்கு உபகரிக்கவேண்டுகிறோம்.

July-1934

# வேள்வி

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

மனிதன் நிலை என்றும் ஒரு பெற்றியா யிருப்பதில்லை. மனிதன் நிலை நாளுக்குநாள் வளர்ந்தே வருகிறது. இதற்குக் காரணம் என்னை? மனிதன் மாட்டுப் பகுத்தறிவு உண்மையே யாகும்.

மனிதன் அவ்வக் காலத்துக்கு ஏற்ற வண்ணம் தன் வாழ்வுக்குத் துணை செய்யத்தக்க கடவுள், சமயம், வேதம், கல்வி, அரசு, தொழில் முதலியவற்றை ஒழுங்கு செய்து கொள்கிறான். மனிதன், இக்கடவுள் - இச்சமயம் - இவ்வேதம் - இத்தகைக் கல்வி - இத்தகையரசு - இத்தகைத் தொழில் என்று கட்டுப்பட்ட முறையில், அவைகளை என்றுங் கட்டியழுதல் வேண்டும் என்னும் நியதியில்லை. இவை யாவும் அவ்வக்கால நாகரிகத்துக்கு இயைந்து நிற்கு முறையில் தாமேஒழுங்குபட்டு வளரும். இவ்வளர்ச்சிக்கு இயற்கை துணைபுரிதல் இயல்பு.

நமது நாட்டில் வேள்வி(யாகம்) என்பதொன்று முன்னை நாளில் நடைபெற்று வந்தது. அவ்வேள்வியைப் பற்றிய குறிப்புக்கள் பல ஹிந்து வேதத்திலுண்டு. அவ்வேள்வியின் வரலாற்றைப் பலர் பலவாறு கூறுப. அவரவர் கூற்றுக்களைத் திரட்டி ஆராய்ந்துழிச் சில உண்மைகள் கிடைக்கின்றன. அவைகளைப் பற்றி ஈண்டு விரிவுரை வேண்டுவதில்லை; சுருங்கிய உரை சாலும்.

ஆரியர்கள் குளிர் மிகுந்த நாட்டில் வதிந்தபோது, பெரிதும் புலால் உணவு உண்ணும் அவசியம் அவர்கட்கு ஏற்பட்டது. அவர்கள் பாரதநாடு புகுந்தபோதும், அவ்வுணவு அவர்கள் வாழ்விற்கு இன்றியமையாததா யிருந்தது. பழக்கங் கொடியதன்றோ?



வள்ளுவர் அருண்மொழிகளையுணர்ந்த பிராமணர்கள் இக்கொலை வேள்வியை மறுத்தே தீர்வார்கள். தமிழ் நாட்டிலுள்ள பிராமணர்களிற் பெரும்பான்மையோர் ஆரியரல்லர். அவர் தமிழர்; ஆரிய வழக்க வொழுக்கங்களை மேற்கொண்டவர். கொல்லாமை அவர்கள் அறம். அவ்வறவழி நின்று, கொலை வேள்வியைத் தகையும் முயற்சியில் அவர்களுந் தலைப்படுவார்களாக.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நாட்டிடை வாழ்ந்த மக்கள் வழக்க வொழுக்கங்களைக் கூறும் வேதத்தின் பகுதிகளைச் சரித்திர முறையில் படித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, அவைகளை மீண்டும் வாழ்வில் புதுக்க முயல வேண்டுவதில்லை. பழமையில் இக்காலத்துக்கு வேண்டப்படும் பொருளிருப்பின், அப்பொருளைக் கொள்ளலாம். உயிர்க்கொலை வேள்வி இப்பொழுது எற்றுக்கு? அதனால் வாழ்வுக்கு ஏதேனும் நலன் உண்டா? எக்காரணம் பற்றியோ ஒரு காலத்தில் அவ்வேள்வி நிகழ்ந்து வந்தது. பின்னே அது பல வழியிலும் மாற்றப்பட்டது; சிதைக்கப்பட்டது.

வேத காலத்துக்குப் பின்னே, சமணம் பௌத்தம் என்னும் அருட்சமயங்கள் தோன்றி, மக்கள் வாழ்வை செம்மை செய்தன. அச்சமயங்களின் கருத்துக்கள் பல, இக்காலச் சைவ வைணவ சமயங்களில் நுழைந்திருக்கின்றன. தற்காலச் சைவ வைணவர்களிற் பலர் உயிர்க்கொலை வேள்விக்கு ஆதரவு நல்கமாட்டார். நாளுக்குநாள் மக்கள் அறிவு வளர்கிறது. "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்னும் அறவுரை வழி நிற்க மக்கள் முயன்று வருகிறார்கள். இவ்வேளையில் வேதத்தின்மீது பழி சுமத்திக், கொலை வேள்வியை மீண்டும் புதுக்க முயல்வது, ஹிந்து மதத்தை அழிக்க முயல்வதாகும்.

தற்போதைய ஹிந்து மதம் வெறும் வேதத்தின் பழைய பகுதிகளை மட்டும் கொண்டு நிலவுவதன்று. அப் பகுதிகட்கு மாறுபட்ட பலதிறக் கருத்துகள் புக ஹிந்து மதம் இடந் தந்திருக்கிறது. ஹிந்துக்கள் என்று சொல்லப் படுவோருள் பலர் வேதத்தின் எல்லாக் கூறுகளையும் ஏற்றுக் கொள்பவரல்லர்.

இந்நாளில் வேதமென்றும் மதமென்றும் கடவுளென்றும் சொல்லிக்கொண்டு, கொலை வேள்வியால் வாயில்லாப் பிராணிகளைச் சித்திரவதை புரிவது அநாகரிகமாகும். இவ்வநாகரிகச் செயலை நியாய முறையில் தகையப் போதுவாக எல்லாரும், சிறப்பாகத் தற்கால நாகரிக முணர்ந்த பிராமணர்களும் முயல்வார்களாக.

## சோழர் ஆட்சியில் முதன்முதல் திருப்பதிகம் பாட ஏற்பட்ட கல்வெட்டு

[தி. கி. நாராயணசாமி நாயடு]

திருச்சி ஜில்லா அல்லூர் கிராமத்து பசுபதீசுவரர் கோயிலில் சோழர் குடியில் சோழ சிகாமணி என்னும் முதற் பராந்தகரது சக-வது ஆட்சி ஆண்டில் இக்கல்வெட்டுசெதுக்கி இருக்கிறது. இவரது ஆட்சி கி. பி. 907 முதல் தொடங்குதலால் இச்சாசனத்தின் காலம் கி.பி. 948. திருப்பதிகம் பாடும் அடிகள்மார் மூவருக்கு, அரசன் கட்டளைப்படி நிலத்தைத் தேவதானமாக விட்ட இக்கல்வெட்டின் மூலத்தை திருந்திய முறையில் காண்க.

ஸ்வஸ்தி ஸ்ரீமதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பர கேசரி பன்மற்கு யாண்டு சக-ஆவது........அகமமுடையார் வீரசோழ இளங்கோவேளாயின ஒற்றிமதுராந்தகன் இந் நிலம் வேலியும் குடிநீக்கிய தேவதானமாகச் செய்து கொடுத்தோம். இந்நிலம் வேலிக்கும் நிபந்தம் அடைத்த பரிசாவது, திருஅமுதுக்குப் பத்தெட்டுக்குத்தல் சூலநாழியால் அரிசி ஐஞ்ஞாழியால் நெல்லுகுறுணி நானாழி உரியும், நெய் அமுதுக்கும், கறி அமுதுக்கும், தயிரமுதுக்கும் அடைக்காய் அமுதுக்குமாக நெல் முந்நாழியும், ஆகநெல் நிசதி நெல்........ கானபடி ஓராட்டை நாளைக்கு நெல் அறுபதின் கலத்தால் நிலம் ஐந்தரையும் திருப்பதியம் பாடும் அடிகள்மார் மூவருக்கு நிலம் ஐந்தரையுமாக நிலம் வேலியும் குடிநீக்கிய தேவதானமாக........என்று ஸ்ரீமுகம் வந்ததைத் தொழுது தலைமேல் கொண்டு அறையோலை செய்து கொடுத்தோம், அல்லூர் ஊரோம். இது பன்மாஹேஸ்வரர் ரக்ஷை.



## திருவிசைப்பா

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

உயர்கொ டியாடை மிடைபடலத்தி
னெங்குதூ மப்படலம்
பெயர்நெடு மாடத்தகிற் புகைப்படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்
சியரொளி மணிகணிரந்து சேர்கனக
நிறைந்த சிற்றம்பலக் கூத்தா
மயர்வறு வமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிக ளென்மனத்து வைத்தருளே.

(உரை) உயர்கொடிஆடை - உயர்ந்த கொடிகளிற் கட்டப்பட்டிருக்கும் சீலைத் துணிகள்; மிடைபடலத்தின் - நெருங்கிய கூட்டத்

தில்; ஓங்குதூமப்படலம் - மேலே செல்கின்ற மறையவர் வேள்விக் குண்டப் புகைக் கூட்டமும்; பெயர் - அசைகின்ற; நெடுமாடத்து அகிற் புகைப்படலம் - நீண்ட மாளிகையின் மேடைகளில் (பெண்கள் தங்கள் கூந்தல்களுக்கு ஊட்டுகின்ற) அகிற் புகைக்கூட்டமும்; பெருகிய பெரும்பற்றப்புலியூர் - ஒன்றுசேர்ந்து பெருகிப் போகின்ற தில்லைத் தலத்தின்கண்; சியர் ஒளிமணிகள் - சிறந்த பலவகை ஒளிகளோடு கூடிய ஒன்பது மணிகளும்; நிரந்துசேர் - ஒன்றுக்கொன்று இணையாகப் பரந்து சேர்ந்திருக்கிற; கனகம் நிறைந்த சிற்றம்பலக் கூத்தா! - பொன்னால் வேயப்பட்டிருக்கிற பேரம்பலத்தில் திருநடஞ் செய்கின்ற கூத்தனே! என்மனத்து - எனது உள்ளத்தில்; மயர்வு அறும் அமரர் மகுடம் - மயக்கம் நீங்கித் தெளிவு அடைந்திருக்கிற தேவர்களுடைய முடிகள்; தோய்மலர்சேவடி - சேர்ந்திருக்கின்ற பூக்கள் சூடிய இரண்டு திருவடிகளையும்; வைத்தருள் - வைத்து அருள்செய்தல் வேண்டும்.

(விளக்கம்) இத்தப் பாட்டின் முன் இரண்டு அடிகளும் தில்லை நகரிலுள்ள மாடமாளிகைகளில் உயர்த்திக் கட்டப்பட்டிருக்கிற சீலைத் துணிகள் அசைதலையும் அச்சீலைத் துணிகளுடன் மறையவர் வளர்க்கும் ஓமகுண்டப் புகையும் பெண்கள் தங்கள் கூந்தல்களுக்கு ஊட்டும் அகிற்புகையும் சேர்ந்து விளங்குதலையும் உடைய நகர்ச் சிறப்புக் கூறுகின்றன. மூன்றாவது அடி தில்லையிலுள்ள பொன்னம்பலச் சிறப்புக் கூறுகின்றது. நான்காவது அடியில் ஆசிரியர் சிவபெருமானை நோக்கி அவருடைய திருவடிகளிரண்டும் தமது மனதில் வைத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றார். படலம் - மூன்று இடங்களில் வருகிற படலம் என்ற சொல் கூட்டம் என்ற பொருள்பட வந்தது. சியர் ஒளி - சீர் என்ற சொல் எதுகை நோக்கிச் சியர் எனத் திரிந்தது. பேர் என்ற சொல் பெயர் எனத் திரிதல் போல. சியர் ஒளி மணிகள் - ஒன்பது மணித்தேர்வு நூற்படி (நவரத்தினப் பரிசை நூல்) யாதொரு குற்றமுமில்லாத ஒளிகளையுடைய ஒன்பது மணிகள். சிற்றம்பலக் கூத்தன் - சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்ற கூத்தப்பிரான் (நடராஜப் பெருமான்) சித் + அம்பலம் = சிற்றம்பலம் என வந்தது. பேரறிவு அம்பலம் இறைவன் தூவெளியில் செய்கிற கூத்து பல்லுயிர்களிலும் அறிவு விளங்கச் செய்தலால் சிற்றம்பலம் எனப்பட்டது. சிதம்பரம், சிற்றம்பலம்



இரண்டும் ஒரு பொருட்சொற்கள். மயர்வு அறும் அமரர் - சிவபெருமானைப்பற்றித் தெளிவு அறிவு இல்லாத தேவர்கள் அவனுடைய திருவடிகளைச் சேர்ந்து வணங்க முடியாது ஆதலின், மயர்வறும் அமரர் என்றார். அமரர் - வடமொழிச்சொல். சாவில்லாதவர்கள் அவர்கள் மனிதர்களைப்போலல்லாது நீண்டகாலம் வாழ்கின்றவர்கள். ஆதலின், அமரர் எனப்பட்டார். உண்மையில் அவர்களுக்கும் பிறப்பு இறப்புக்கள் உண்டு. சேவடி - செம்மை + அடி = சேவடி. நேர்மையான அடிகள்; நேர்மையான மனதை யுடையவர்களாய்த் துதிக்கிறவர்களுக்கு அருள்செய்யும் அடிகள். என் மனத்து வைத்தருள் - திருவடிகளிரண்டும் மனதில் வைத்தல் என்பது மல இருள் முற்றிலும் நீங்குதலால் மனம் (சிந்தை) சிவகரணமாய் நினைப்பும் மறப்புமின்றி எப்பொழுதும் சிவபெருமானையே நினைந்துகொண்டிருக்கும்படி செய்தல் ஆகும். "இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்" என்று மாணிக்கவாசக அடிகள் கூறுதல் காண்க.

# அகிலாண்டேசுவரியின் திருவிளையாடல்

## வங்காளத்தில் நடந்த அபூர்வ சம்பவம்

### பசியால் தவித்த பாலனுக்கு உணவளித்த விந்தை

கல்கத்தாவில் பிரசுரமாகும் "அமிர்தபஸார்பத்திரிகை" என்னும் ஆங்கிலத் தினவர்த்தமானி பின்வரும் கருத்துப்பட எழுதுகிறது:—

அலிப்பூரிலுள்ள தந்திக்காரியாலயத்தில் கடமை பார்க்கும் பாபு ஜானகிநாத பட்டாச்சார்ஜி என்பவர் சென்ற வாரத்துச் சனிக்கிழமை யிரவு காளிபூசை செய்தார். பூசைக்

கான ஒழுங்குகளை அவரது மனைவியார் செய்து நின்றபோது, அவரின் 4 வயது நிறைந்த பிள்ளை தாயிடம் வந்து பசிக்கிறது என்று கேட்டான். பூசை முடிந்த பின்னர்த்தான் உணவு அருந்தவேண்டும் என்று தாய் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். பாலனோ பசிதாங்க முடியாது கதறியழுதான். பூசை முடிந்து உணவு கொடுப்பதற்குப் பிள்ளையைப் பார்த்தபோது அவனைக் காணவில்லை. அன்றிரவு முழுவதும் தேடிப் பார்த்துங் காணவில்லை. வீட்டிற்குச் சமீபமாயுள்ள குளத்திற்குள் வீழ்ந்து இறந்து விட்டானோவென்று ஏங்கி, வலை வீசியும் பார்த்தார்கள். ஆனால் பிள்ளையைக் காணவில்லை. என் செய்வது என்று தந்தையாராகிய ஸ்ரீ ஜானகிநாத பட்டாச் சார்ஜி மனம் நொந்து, விடியற்காலத்தில் ஈசனைத் துதித்தவராய் மலசல உபாதை தீர்ப்பதற்காகக் காட்டுப் பக்கஞ் செல்கையில், ஓர் மூங்கில் தோப்பிற்குச் சமீபமாகத் தனது பிள்ளை விளையாடுவதைக்கண்டு, ஓடிச் சென்று அவனைக் கட்டித் தழுவி, வீட்டிற்குக் கொண்டுவந்தார். எங்கே போனாய் என்று கேட்க அப்பிள்ளை, "நான் என் தாயுடன் தானே விளையாடினேன். அந்த அன்னை (தன் சொந்த அன்னையைச் சுட்டிக்காட்டி) இவளினும் பார்க்க என்மீது மிக்க அன்பு உடையவள். என் பசியை நீக்குதற்கு அவள் தின்பண்டங்களும் பலவகையான கனிவர்க்கங்களும் தந்தாள். அவளைப்போல அழகான அன்னையை நான் கண்டதேயில்லை. அவளது நிறம் கருமையானது" என்று கூறினனாம். என்னே அகிலாண்டேசுவரியின் திருவிளையாடல்!

(இந்துசாதனம்)

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வர பிள்ளை]

(மலர் ௭. இதழ் ௫. ௧௫௭-ம் பக்கம் தொடர்ச்சி)

விபூதி வாங்கு முறையினை விளம்புதும் :—

"பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தன்னிலே யிருந்தும்
பருத்த திண்ணையி லிருந்தும்
பரிவொடு கொடுப்பவர் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினும்
செங்கை யொன்றானும் விரல்மூன்று ஆனாலும்
வாங்கினும் திகழ்தம் பலத்தினோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலும்
அசுத்த நிலமான வதிலும்
அங்கே தரிக்கினும் தந்திடிற் றள்ளினும்
அவர்க்கு நரகமென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தை குறவள்ளி நாயகிதன்னை
மணந்துமகிழ் சகநாதனே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே!"

எனப் பகர்ந்துள்ளார். இஃதாவது வாகனத்தின் மீதிருந்தும், பலகையிலிருந்தும், ஆதனத்தின்மீதிருந்தும், வெளியிலிருந்தும், திண்ணையி லிருந்தும், பூதி கொடுப்பவர் கீழ்நிற்க மேனின்று வாங்கிடினும், தம்பலந் தின்றுகொண்டு வாங்கிடினும் இரௌரவாதி நரகம் தமக்குரிய நகரமெனத் தீர்மானித்தல் வேண்டும். அன்றியும் விபூதியைத் தலைநடுங்கிக்கொண்டும், வாயங்காந்துகொண்டும், தலை கவிழ்ந்துகொண்டும், பாவிகண் முன்னும், அசுத்த விலங்குகண் முன்னும், ஒரு

கையாலும் வாங்கலாகா. திருநீறு வாங்கும்போதும் தரிக்கும்போதும் இடக் கரத்தினையும் உதவல் முறையாம். சிவாசாரியாரும் சிவனடியாரும் திருநீறு ஈயின் எழுந்து கும்பிட்டு மும்முறையேனும் ஐமுறையேனும் பணிந்து (நமஸ்கரித்து) மீண்டும் அஞ்சலிசெய்து இருகரங்களையும் நீட்டி இடக் கையின் மீது வலக்கையை வைத்து அன்புடன் வாங்கித் தரித்துக்கொண்டு பின்னரும் பணிதல் வேண்டும். திருக்கோவில்களிலிருந்து விபூதிப் பிரசாதம் தீக்கை முதலியவற்றால் தம்மிலும் மேம்பட்டவர் கொடுவரின் முற்கூறியவண்ணம் பணிந்து அன்புடன் தரித்தல் வேண்டும். தம்மினுந் தாழ்ந்தோர்தரின் அப்பூதியினை சுத்தமான தானத்து வைப்பித்து மலர்களாலருச்சித்து வணங்கி எடுத்துத் தரித்தல் வேண்டும். இன்னும் ஒரு கையால் வாங்கிய பூதியும் விலைக்குக்கொண்ட விபூதியும், தீக்கையில்லாதவரீந்த திருநீறும் தரிக்கலாகா. விபூதி கீழே சிந்துமாயின் அதனை யகற்றி அத்தானத்தைச் சுத்தியாக்கல் வேண்டும். விபூதிதனை உகுத்தவர் எண்ணில்கோடி நிரயம் புகுவர்' என்பதும்,

" பூதியணு மாத்திரம் வீழ்த்தார் பூதலம்தன்னில்
வாதை நரகத்து ளுறுவார்"

என்பதூஉமாய மறைமொழியினை மறக்கலாகா.

இவ்விதம் உத்தூளனம் தரிக்க வேண்டியவர்கள்:—

" மங்கையர் சந்நியாசி மறைவானப் பிரத்தன் தேவி
தங்கிய பிரமச் சாரிசலந்தனிற் குழைக்க லாகா
அங்குப தேச மில்லா னந்தநீர் குழைக்க லாகா
துங்கவெண் ணீற்றை யள்ளித் துகிலினால் வடித்துக்கொள்ள "

எனவே மாதர்கள், சந்நியாசிகள், வேதமுணர்ந்த வானப்பிரத்தன், அவன் மனைவி, நிலையற்ற பிரமச்சாரி ஆகிய இவர்களும், ஆசிரியருபதேச மில்லாதவரும் நீரில் நீறைக் குழைத்து அணியார். வாயுவை இரேசக, பூரக, கும்பகஞ் செய்யும் சிவயோகிகளும் சமாதிநிலை ஞானிகளும்.



" தக்க ஞானத்தைத் தான்பெறற் பொருட்டுத்
தனியிடந் தனையடைந் திதயத்
துக்க மேவாமற் சுகாதனத் திருத்தி
தோள்தலை கழுத்துடம் பிவைநேர்
ஒக்குமா றிருத்திப் பூதிகொண் டிந்த
வுடம்பை யுத்தூளம் பண்ணி
மிக்கவாய் வரும் இந்தியங்களை யெலாம்
விடயமே லெழாவகை மீட்டுவோர்"

சலங்குழைத்தணியார். மற்றவர்கள் சிவாலயத்திலும் சிவனடியார் கொடுக்கும்போதும் உத்தூளனமாகவே யணியலாம். சிவனடியார் முன்னும் சிவாக்கினி முன்னும் சிவ சன்னிதி முன்னும், தனது குருநாதன் முன்னும் நின்று தரிக்காது சற்று முகத்தைத் திருப்பிக்கொண்டே பூசுக.

இவ்விதம் உத்தூளனம் தரிப்பதாலாய பயனென் ?

"மறைகளா கமத்திற் சொன்ன மாசிலா நீறு தன்னை
முறையுத்தூ ளனம்புரிந்தே மூவிரா றென்றச் சாத்தி
னறைதரு தீர்த்தமெல்லா மாடினூ றியாகஞ் செய்தே
யறுபுவி யடையத்தான முதவினர் பலனையொக்கும்"

எனவே நான்கு வேதங்களிலும் ஆகமங்களிலும் போற்றப்படும் பரிசுத்தமாகிய நீற்றை முறைப்படி உத்தூளனம் புரிந்தால் புகழப்படும் சகல தீர்த்தங்களுள்ளும் ஆடி நூறு யாகஞ்செய்து அந்தணர்கட்குத் திரிலோகமுந் தானஞ் செய்தவரடையும் பலனைவிட மேலான தான பதவி எய்தும் என்க.

# சைவமும் தமிழும்

[அ. மு. பரமசிவாநந்தம்]

" ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும்விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியையோர் மாதோர் பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே "

என வாக்கின்மன்னர் வரைந்தவாறு சைவந் தோன்றிய காலம் இன்றுதான் என்று வரையறுத்துக் கூற முடியாத ஆதிகாலந்தொட்டு இந்நிலவுலகில் நிலைத்து வந்துள்ளது. அஃதேபோல் அருந்தமிழ் மொழியும் உண்டாய காலம் உணர இயலாத அத்துணைப் பழமை பெற்றுள்ளது. இவ்வாறு சைவமுந் தமிழும் தோன்றிய காலந் தோற்றுதலின்றி இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டே வந்துள்ளன. அத்தன்மை எத்தன்மைத்து என ஆராய்வாம்.

தமிழ் இலக்கணங்களில் மிகப் பழமையானதும், பலராற் போற்றப்படுவதும், யாவராலும் விரும்பப்படுவதுமாகிய சில சூத்திரங்கள் மட்டிலே நிலைத்துள்ளது அகத்தியமே. இவ்வகத்தியத்தினை இயற்றியவர் அருங்கலைவல்ல அகத்தியராவர். இவரைத் 'தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவன்' எனக் கம்பரும், தமிழை ' அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு ' என வரந்தருவாரும் கூறிப் போந்தனர். இவ்வகத்தியர் தாம் கூறிய சூத்திரம் ஒன்றில்,

'இலக்கிய மின்றி இலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே



எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்'

என்று கூறியவாற்றால் அவர் காலத்திற்கு முன்பே நாட்டில் இலக்கியம் மிகுந்திருந்தது என்பது தெளிவாகும். எனவே அகத்தியர் திரண்டு பரந்து கிடந்த தமிழ் நூல்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி அவைகளுக்கெனப் பன்னீராயிரம் (12,000) சூத்திரங்கள் கொண்ட அகத்தியம் என்ற தூய நூலை யியற்றி நாம் அறிய அருளினர் என்பது புலனாம்.

இனி, இவ்வகத்தியர் அருந்தமிழறிந்ததை அருங்கலை வல்லார் இருவேறுவிதமாகக் கூறுகின்றனர். ஒருசாரார் ஆதியங்கடவுளாம் மாதொருபாகனிடத்தே இவர் பயின்றாரென்றும், மற்றொருசாரார் குன்றுதோராடுங் குமரவேளிடத்துப் பயின்றாரென்றுங் கூறுப. அகத்தியர் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளினிடத்துப் பயின்றார் என்பவர் காட்டும் ஆதாரங்கள்,

" தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்தந்தான்" **(கம்பர்)**

" ஆதியில் தமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ்ஞான நலம் பெறற் பொருட்டே" **(சேனாவரையர்)**

" வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாய்த்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெல்லாந் தொழுதேத்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற் [றும்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்"
**(காஞ்சிபுராணம்)**

" விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கியம் மேனாள்
வடமொழிக் குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதி ராகிய தென்சொல்
மடமகட்கரங் கென்பது வழுதிநா டன்றோ" **(திருவிளையாடல்)**

அகத்தியர் பன்னிரு கரத்தானிடம் பயின்றார் என்பார் காட்டும் ஆதாரங்கள்.

"அருமறை யாகமமங்க மருங்கலை நூல்தெரிந்து
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருவை"

(சிவஞானசித்தியார்)

"அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறி வுறுத்த செந்தமிழ்ப்
பரமாசாரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பு"

(சிவஞான முனிவர் - பாயிர விருத்தி)

இவ்விருசாரார் கொள்கை யெவ்வாறாயினும் இவர்களிலொருவரிடத்திருந்தே அகத்தியர் அருந்தமிழ் கற்றவராதலின் சைவத்திற்குந் தமிழுக்கும் உள்ள பொருத்தம் புலப்படும். இதுவுமன்றி பார்வதியாரின் திருமணத்தின் பொழுது வடதிசை தாழ்ந்து தென்திசையுயர ஆதியங் கடவுள் அகத்தியரைப் பொதிய மலைக்குச் செல்லக் கட்டளையிட்டனர். எனவே அகத்தியர் நம் சைவசமயத்தைச் சார்ந்தவரென்பது தெற்றெனப் புலப்படும். இவ்வழியே அகத்தியர் சைவசமயத்திற்குரிய தனிப்பெருங் கடவுளரிடத்தே தமிழ் கற்று அத்தமிழை வளர்த்தார் என்பது திண்ணம்.

இஃது இவ்வாறாக முதல் இடை கடை யென்னும் மூன்று சங்கங்களும் தென்மதுரையிலேயும், கபாடபுரத்திலேயும், மதுரையிலேயும் நிறுவி சோமசுந்தரப் பெருமானது திருவருளால் காக்கப்பட்டன என்பது இறையனார் அகப்பொருள் உரை முதலியவற்றான் அறியலாம். இவற்றுள் முதற் சங்கத்தே மாதொருபாகனும் வள்ளிமணாளனும் இருந்தனர். இறையனார் அகப்பொருள் கூறும் வரலாறு :

"தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று சங்கம் இரீஇனார் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்க மிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களால் பாடப்பட்ட எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர் நூல் அகத்தியம் என்ப."



இந்த வரலாற்றினால் முதற் சங்கத்தே சைவ சமயத்தைச் சார்ந்த அகத்தியர் முதலாகிய இருந் தமிழ்ப் பெரியோர்களை யன்றி ஆதியங் கடவுளும், அறுமுகக் கடவுளுங் கூட அருந்தமிழுக்கு உதவினார்கள் என்பது புலனாம். சைவத்தின் முதற் கடவுளெனக்கூறும் கொற்றவரே சங்கத்தமர்ந்து தமிழை வளர்த்தார் எனின் இச் சைவத்திற்குந் தமிழுக்கும் உள்ள தொடர்பு தெற்றென விளங்கும். தவிரவும் மதுரையில் தமிழுக் குழைத்து மாபெரும் அரசுசெய்த பாண்டியர் பலரும் சைவராய் இருந்தார்கள் என உயரிய நூல்கள் உரைக்கின்றன. எனவே இத்தமிழை வளர்த்தவர் சைவரே யாகும்.

# பிறவிக்கடல் நீத்த பிரான்

[சே. சிவஞானம் பிள்ளை.]

(மலர் - எ, இதழ் - ரு, கசுo-ம் பக்கத் தொடர்ச்சி.)

## பாண்டிநாட்டுக்குச் செல்லல்

ஞானம்பெற்ற பிள்ளையார் விடைபெற்றுத் தொண்டை நன்னாட்டுக்குச் சென்றபின், வாகீசர் பாண்டிநாட்டின்கண் உள்ள அரன் மகிழுந்தானங்கள் அணைந்து இறைஞ்சித் திருஇராமேச்சுரம் சென்றனர். அவ்விடத்தினின்றும் நீங்கித் திருநெல்வேலி முதலிய பற்பல தலங்களை வணங்கிப் பாடி மீட்டும் பொன்னிநாட்டை அடைந்துப் பூம்புகலூரைச் சார்ந்தனர்.

## நவமணிகளை வெறுத்தல்

திருப்புகலூரைச் சார்ந்த வாகீசர் புகலூர் புனிதமலர்த் தாள் வணங்கி நாடோறும் திருமுன்றிலில் திருத்தொண்டு செய்து பெருங்காதலுடன் அங்குவைகி எண்ணிறந்த தமிழ் மாலைகள் பாடி மகிழ்வுற்றனர். திருப்புகலூரில் உழவாரத் திருத்தொண்டு செய்து வருநாளில், ஆளுடைய அரசின் நிலையை உலகத்தார் அறியக் காட்டுவான் வேண்டி உழவாரப்படை நுழைந்த இடமெல்லாம் பொன்னிறொடு நவமணிகள் பொலிந்து இலங்கப் பன்னகாபரர் அருள்செய்தனர். வாகீசர் அவைகளைப் பருக்கைக் கற்களாக எண்ணி உழவாரத்தில் ஏந்திவாவியினிற் புகும்படி எறிந்தனர்.

**அகச்சான்று** :—இவ்வற்புதத்திற்குத் தேவாரப்பதிகம் கிடைத்திலது; சிதைந்தனவற்றிற் சேர்ந்தது போலும்; பெரியபுராணமுடையார் கூற்றே ஆதாரம். இவ்வற்புதத்தை,

‘பெறுமணி நிறத்தமைத்தும் பிறங்குபொன் உடம்பிற் போர்த்தும்
உருபெருங் காவல்பூண்டு ஓர்ந்து உறங்குமாயவன் போலாது



பெறுமணி பொன்னெலாங்கை உழவாரத்திற் சேர
உறுபுறம்விட்டு ஆனந்த விளக்கஞ் செய்தவர் தாள்உன்வாம்’

என்று பிற்காலத்துத் தமிழறிஞர் வியந்து துதித்திருக்கின்றனர்.

வாகீசர் மனநிலையை உலகவர்க்குக் காட்டுவான் எண்ணிய புகலூரர், வானகத்தினின்றும் அரம்பைமாதர்கள் வந்து இழிந்து வாகீசரைத் தம் வயப்படுத்த முயலும்படி திருவுளம்பற்றினார். வாகீசர் இறைவன் திருவடியிலே நிலைத்த அன்புடையவராய்ப் ‘பொய்மாயப் பெருங்கடலில்’ என்னும் திருப்பதிகத்தைப் பாடித் தாம் செய்யும் திருத்தொண்டில் வழுவாமல் நின்றனர். வந்த அரம்பையர்கள் அவரை வணங்கி மீண்டனர்.

**அகச்சான்று** :—‘பொய்மாயப் பெருங்கடலில்’ என்னும் பதிகத்தின் எட்டாவது செய்யுளில்,

‘திருவாரூரிற் பரஞ்சோதிதனைக் கண்டேன் படேன் நும்பண்பிற்
பரிந்தோடி ஓட்டந்துபகட்டன் மின்னே’

என்றும், ஒன்பதாவது செய்யுளில்,

‘ஆரூரர் ஆள்வானைக் கடுகச் சென்றடைவேன் நும்மால்
ஆட்டுணேன் ஓட்டந்தீங் கலையேன் மின்னே’

என்றும், திருவாய்மலர்ந்துள்ள வாக்குகளே மடவாரை வெறுத்தமைக்குச் சான்றாக விளங்குகின்றன. நம்பியாண்டார் நம்பிகள் தமது ஏகாதசமாலையில்,

‘திருநாவுக்கரசடியவர் நாடற்கதிநிதி தெளிதே னொத்தினிய
சொல்மடவார் ஊர்ப்பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில வசியாகச் சொலும்
அவை அகளாகக் கருதிமெய்

யிரகோடி ஆன்மாக்களுளவென்றும், அப்பல்லாயிரகோடி ஆன்மாக்களையும் பற்றியிருக்கும் பாசமும் அநாதியேயென்றும், இம் முப்பொருள்களும் என்றும் அழியாப் பொருள்களென்றும், அவற்றுள் முதற்பொருளாய கடவுள் பேரறிவுடையாரென்றும், ஆன்மாக்கள் சிற்றறிவுடையனவும் உணர்த்த உணரும் தன்மையனவும், சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையனவுமா மென்றும், அவை பாசத்தின் சார்பு நீங்கிப் பதியைச் சார்ந்திருப்பதே வீடுபேறெனவும், ஆன்மாக்கள் பாசச் சார்பொழித்து வீடுபேறடைவதற்குப் பல்லூழிகாலம் பழகவேண்டுமென்றும், உருவ வழிபாடு அப்பழக்கத்திற்கு ஒரு ஊன்றுகோலெனவும், அப்பழக்கத்திற்கு இன்றியமையாதனவாய் பல பிறப்பு வேண்டப்படுமென்றும், அப்பிறப்புகளெல்லாம் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்பப் பதியால் அனுக்கிரகிக்கப் படுகிறதென்றும், இன்னும் பலவிதங்களாய் சைவம் தன் உண்மைகளையுணர்த்தா நிற்கின்றது.

எச்சமயமும் ஈச்வர அமைப்பென்பது இச்சமயத்தின் துணிபு.

‘யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொருபாகனார் தாம் வருவர்’

என்பதும்,

‘விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்’

என்பதும் இதற்குச் சான்று.

‘அன்றோ ஆமோ எனவும் சமயகோடி
அத்தனையும் வெவ்வேறா யாற்றநேரே நின்றாயே’

என்பதனால் கடவுளுண்மையை ஐயுறும் மதத்தினர்க்கும் அன்னார் துணையாகும் தன்மையார் என்பதை உணர்ந்தா



ரெவரும் பிற சமயங்களைப் பொய்ச்சமயங்களெனப் பேசுவரோ? ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப சில காலங்களில் சிலர்களுக்கு சில உணர்ச்சிக ளுண்டாகும்படிக்கும், அவ்வுணர்ச்சிகளின் வழித்தாய்ச் சில சமயங்கள் தோன்றும் படிக்கும் செய்வது அருட்கடலாய கடவுளன்பின் திறமன்றோ?

எந்த ஆன்மாவும் இறுதியில் வீடுபேறடையு மென்பதும் இச்சமயத்திற் கண்ட உண்மை. நல்ஞானமும் வீடுபேறும் பெறுவதன்முன் ‘பல்லூழிகாலம் பயின்று அரனை அர்ச்சிக்க’ வேண்டுமென்றும் அவ்விதப் பழக்கத்தால் சிறிது சிறிதாய்ப் பாசம் நாசமாகுமெனவும், அப்பாசநாசத்திற்காகவே கடவுள் ஆன்மாவுக்கு இருவினைக்கேற்பப் போக்குவரவு புரிய தனுகரண புவன போகங்களை அருளிச் செய்கிறாரென்றும் கூறுமாற்றால், ஆன்மா பல் பிறப்புற்று இருவினை களைந்து சிவபோதமடைந்து சிவத்தோடு இரண்டறக் கலந்து இன்புறுமென்பது பெற்றாமேயன்றி, ஒரு பிறப்பிற் செய்த கருமத்தின் நற்பலனையோ அல்லது மற்றதையோ ஊழூழிகாலம் அனுபவிக்கும் எனப் பெற்றோமில்லை.

‘காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே’ என்றும், ‘அவனருளாலே அவன்றாள் வணங்கி’ என்றும் ஆன்றோர் கூறலின், இறைபணி நிற்றலும் உண்மையுணர்தலுமே பதியருளாற்றான் ஆமெனின் ‘அவனருளே கண்ணாகக் காணினன்றிக்’ காணப்பெறா ஆன்மா எவ்வுணர்ச்சிபெறினும் எக்கருத்துக்கொளினும் அஃது அவ்வான்மாவின் பக்குவ நிலைக்கேற்ப அரனாலேயே அளிக்கப்படுகிறதென்பதன்றி, அவ்வுணர்ச்சியையோ அக்கருத்தினையோ நன்றோ அன்றோ என்று தெளிந்து நன்றெனிற் கைகூடச் செய்வனென்றும் அன்றெனில் அவ்விதம் செய்யானென்றும் கூறும் சமயநெறி

தழுவாது 'வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை கருத்தறிந்து முடிப்பான்றன்னை' என்றும் 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்றும் எழுந்த 'நிந்தையறு முழுத்துறவுடைய' நமது திருநாவுக்கரசின் திருவாக்கால் சைவக் கடவுள் வேண்டினர் வேண்டியாங் கெய்துவிப்பன் என்பதும் பெற்றும்.

பிறப்பாதிகாரணங்களால் ஏற்படும் குறைகளெல்லாம் சமய உண்மை உணர்ந்தார்பால் நில்லா தொழியும் என்பதும் சைவச் சிறப்புண்மைகளிலொன்று.

'சிவனெனு மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடி னவனுட னுறைக
அவனொடு கலந்து பேசுக அவனொடு
அருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா
ஊமரோடுடன் பயில் கொடியோன்
இவனென கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கில்லை கலைசையாண் டகையே.

என்ற சிவஞானசுவாமிகள் திருவாக்கும், நமது சைவப் பெருந்தகையார் வாகீசப்பெருமானார்,

'சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவாரவர் செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர்
நாம் வணங்குங் கடவுளாரே'

என்று கூறிய அருள்வாக்கும் 'குலமிகத்தருவது நமச்சிவாயவே' என்பதற்கிணங்க சிவஞான உண்மை



உணர்ந்து சமயநெறிதழுவுவார் தமக்குள் குலவேறுபாடு கருதாரென்பதே அன்றி குலவேறுபாடு குறிக்குங்கொள்கையா ரவ்வுண்மையுணர்ந்தாரலரென்ற உண்மையையும், கேவலம் பிறப்பளவால் உயர் விழிவு கருதேலென விதிக்கும் நெறிகள் போலல்லாது பழக்கவழக்கத்திலுளதாகும் எவ்வித மேன்மைதாழ்மையும் மெய்ப்பொருளுணர்ச்சி யுண்டாமிடத்து இல்லாதாகும் என்ற உண்மையையும், புலப்படுத்தின வென்று துணியலாகும். குறித்தபாக்கள், குலவேற்றுமையேயன்றி, குணவேற்றுமை, பொருள்வேற்றுமை முதலாய், உளதென நினைக்கும் எவ்வேற்றுமையும் மெய்யுணர்வால் நீங்கப்பெறுமென்ற சமய உண்மையை உணர்த்த வெழுந்தவையாகும்.

'குலவேறுபாடு கொள்ளற்க' என்று கூறு மாத்திரையால் கருதிய நற்பயன் ஒன்றும் விளையாதென்பது தெளிந்தோர் தேர்ந்த உண்மை. அங்ஙனம் கூறுமாற்றால், சொல்லளவில் ஓர் நயந் தோன்றலுண்டெனினும் உண்மை யநுட்டானத்தில் உறுதிபயத்தலில்லை. என்னை யெனின், மனத்தூய்மை யில்லாதவழி, உண்மை அநுட்டானம் கூடாதாதலின். சைவம் இப் பயனில் முறை பாராட்டாது தொழில் இடம் குணம் ஆதியவற்றால் அமைந்த குலமுதலாய ஏற்றத்தாழ்ச்சிப் பிரிவுகள் நிகழ்ச்சிவழக்கில் உளவென்றும் அவை உண்மையில் வையகத்தார் கற்பனையென்றும் அக்கற்பனை மயக்கம் சிவஞான உணர்ச்சியால் மறையுமென்றும் கூறி உண்மை நெறியை உணர்த்தாநின்றது.

இச்சமயக் கடவுள் இடுகுறிப்பெயருடையனாகாது அன்பு என்றும், பாசபந்த மென்றுமிலான் என்றும் பொருள் தரும் சிவம் எனும் காரணப்பெயரா லழைக்கப்பட்டமையும் சைவ சமயச் சிறப்புணர்த்தும் குறிப்புக்களிலொன்று. ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலானாயினும் அன்னார்க்கு ஆயிரந்

திருநாமம் ஆன்றோர் சூடியதெல்லாம் அன்புமேலீட்டால் என்பது நூல்முடிபு.

நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்பும் உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடைய குணப்பெருங்குன்றில் ஈடுபட்ட மெய்யன்புடையார் அவனருளே கண்ணாகக்கண்ட காட்சிகளாதியவற்றை ஆனந்தப் பெருக்காற்பாராட்டிப் புகழ்ந்தமையன்றோ எம்பெருமாற்குத் திருநாமங்களும் திருச்சரிதங்களுமாயின! அன்றி இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டும் இயல்பிலனைமந்துளனே? சைவசாத்திரங்களில் பதியிலக்கணம் கூறுமிடமெல்லாம் இச்சிறப்பிலக்கணம் தெற்றென விளங்கும் என்பது திண்ணம்.

இன்னும் இச்சமயச் சிறப்புண்மைகளில் ஆண்டான் அடிமைத்திறம் விளக்கலொன்று. ஆன்மவிலக்கணம் முன்னரே கூறியிருத்தலின் ஈண்டு பதிக்கும் பசுவுக்குமுள்ள ஒற்றுமையை ஆன்றோர் வாக்கினின்றும் எடுத்துக் காட்டல் சால்புடைத்து. அது, பசு, பதியிடம் முறையிட்டதாயமைக்கப்பெற்றது.

‘ஒன்றே தன்மை யுனக்குமற் றெமக்கு
மன்றென மொழியினு மாமெனப் படுமே
யங்ஙனங் கூறிய தெங்ஙனம் பிறவெனி
லெஞ்ஞான் றுளையுள மஞ்ஞான் றியாமே
யழியா நிலைமையை யனையம் யாமே
வியாபக நினக்குள தியாமுமஃ துளமே
யறிவெனப் பெயரிய பெயரினை யப்பெயர்
பிறிவரும் பெயராப் பெற்றனம் யாமே
இச்சா ஞானக் கிரியையென் றிசைக்குஞ்
சத்திக ளுளையுள தத்திற மெமக்கே
யிந்நிலை முழுவதூஉ மெமக்குமுண் டாகலி
னன்னிய மலநினக் கநந்நியம் யாமே’ —**குமரகுருபரர்.**

(தொடரும்)

திருப்பெருந்துறையில் அருளிய

# உயிருண்ணிப் பத்து

சிவானந்தம் மேலிடுதல்

**கலி விருத்தம்**

திருச்சிற்றம்பலம்

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாட்களித் தெந்நாள்இறு மாக்கேன் இனியானே.

**உரைநடை:**—பைந்நா அரவுபடம் ஏர் அல்குல் எனக்கொள்க. செந்நாவலர் பரசும் புகழ் உறைவாய் என்ற அடியை முதலிற் கொள்க.

**உரை:**—செவ்விய நாவன்மையுடைய புலவர் போற்றுங் கீர்த்தியுடைய திருப்பெருந் துறையிலுறைகின்ற பெருமானே! பசிய நாவினையுடைய பாம்பின் படத்தை யொத்த முன் பகுதியுடைய உமை பாகனுய்த் தோன்றி, நாள்தோறும் எனது உடம்பை விட்டு நீங்காத வினையினைத் தொலைப்பவனே! காளைவாகனனே! இனிமேல் யான் எந்நாளிலே மகிழ்ந்து எந்த நாளிலே இறுமாந்திருப்பேன்?

**குறிப்பு:**—அல்குல் = இடைக்கு முன்பாகம். வினைப் போகமே தேகமாதலின், மெய் பிரியாவினை என்றார். ஞானிகளுக்கு வரும் வினைப் பயனை இறைவனே ஏற்றுக் கொள்கின்றானென்ற கருத்து இங்கே புலனாதல் காண்க. ௧

நானாடி யணைவானொரு நாய்க்குத் தவிசிட்டிங்
கூனாருடல்புகுந்தான்உயிர் கலந்தான்உளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறைஉறைவான்
வானோர்களும் அறியாததோர் வளம்ஈந்தனன் எனக்கே.

**உரைநடை:**—நான் ஆர் என்பதன் பின், மூன்றும் அடியை முதலிற் கொள்க.

**உரை:**—நான் யார்? (யாதொரு தகுதியுமில்லாதேன்) வண்டு பொருந்திய சடை முடியையுடையானாகிய நிலைபெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமான், நான் தனது திருவடியை எய்துதற்பொருட்டு, ஒரு நாயாகிய எனக்கு இருக்கை யளித்து இவ்வுலகிலே புலால் நிறைந்த உடம்பிலே புகுந்து உள்ளத்தைப் பிரியாதவனாய் உயிரிற் கலந்தான். மேலும் விண்ணவரும் அறியவொண்ணாத வொரு (பேரின்பச்) செல்வத்தை எனக்கு நல்கியருளினன்.

**குறிப்பு:**—அடிகட்கு உடலிலும் உள்ளத்திலும் உயிரிலுங் கலந்தவனாய் இறைவன் விளங்கினமை, ஈண்டு அறியற்பாலது. தேன் = வண்டு. சடையிலுள்ள மலரிலே வண்டு மொய்க்கு மென்பது கருத்து. ௨

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னாக்கிச் [யும்
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறைஉறை
பனவனெனைச் செய்தபடி றறியேன் பரஞ் சுடரே.

**உரைநடை:**—மனவாசகங் கடந்தான், சினமால் விடையான், உறையும், பனவன், பரஞ்சுடரே, எனைமத்தோன் மத்தனாக்கி எனைச் செய்த படிறு அறியேன். எனை நான் என்பதறியேன், பகலிரவாவது மறியேன்.

**உரை:**—மனத்தையும் சொல்லையும், (காயத்தையுங்) கடந்தவன், வலியுடைய திருமாலைக் காளை யூர்தியாகக் கொண்டவன், நிலைபெற்ற திருப்பெருந்துறையின்கண் வீற்றிருந்தவனாகிய வேதியன், மேலான ஒளிப்பிழம்பு போல்வான், என்னைக் களிப்பு மிகுந்த பித்தனாக்கி எனக்குச் செய்த சூழ்ச்சியை அறியேன். நான் யாரென்பதறிந்திலேன்; பகலு மிரவுங் கழிந்ததையும் உணர்ந்திலேன்.

**குறிப்பு:**—தன்னுணர்ச்சியின்றி இறை நினைவேயுடைமையால், தான் யார் என்பதை அடிகள் தெரியாதவராயினர். சக



லாவத்தை கடந்து, சுத்த நிலையிலிருப்பதால், கரணங்கள் கொண்டுணரும் காலத்தினியல்பை அறிந்திலர். மனமுஞ் சொல்லுங் கூறவே, காயத்தையு முடன் கொள்க. மத்த + உன்மத்தன் = களிப்புடைய பித்தன். மிகுந்த பித்தனென்றும் பொருள் கொள்ளலாம். ஞானோபதேசம் பெறுதற்குமுன், அறியப்படாத தன்மை தனக்கு வந்தெய்தினமையாற் படிறு என்றார். பனவன் = முனிவன், வேதியன். பரஞ்சுடரென்பதைப் பனவனென்பதோடியைத்துப் படர்க்கையாகக் கொள்ளுவதே பொருத்தம். ௩

வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையில்உறைபெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்மறுமாற்றத் திடையானே.

**உரைநடை:**—முதலடியை இறுதியிற் கொள்க. பெருந்துறையிலுறை பெம்மான் என்பதை முதலிற் கொள்க. தான் புகுந்து என்பின் புரையுருக்கிப்பினைத்தான் புகுந்தெல்லே எனையாண்டான் என அமைக்க.

**உரை:**—திருப்பெருந் துறையில் வீற்றிருந்த பெருமான், தானே வலிதிற் போந்து என்னுடைய என்பின் உள்துளைப் பகுதிகளை யுருகுவித்து அவற்றினூடாகப் பின் பக்கமுஞ் சென்று ஐயோ, (என்னை முற்றிலும் வியாபித்து) என்னை ஆட்கொண்டருளினன். அவன் என் உள்ளத்திலுள்ளான், கண்ணினுள் இருக்கின்றான்; தவிரவும் எனது சொல்லினிடையே யுமுளன். அவனைப்போல வினையையொழிப்பார் பிறர் யார் அகன்ற இவ்வுலகில் உளர்? சொல்லுவீராக.

**குறிப்பு:**—தான் புகுந்து = தானே வலிந்து. புரை = உட்டுளை. பினைத்தான் = பின்பக்கத்தானும். எல்லே—இரக்கச் சொல் அவன் பெருமைக்குக் குறைவான செய்கை, கருணையாற் செய்தருளினன் என்பது கருத்து. 'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக் கென்னுளே நிற்கும் இன்னம் பரீசன்' என்ற அப்பர் திருவாக்கை ஒப்பிடுக. பெம்மான் = பெருமான். விரும்பத்தக்க பெரியோன் எனவுங்

கூறலாம். (பெம்=விருப்பம். மான்=மகான்) மறும் என்பது மற்றும் என்பதன் இடைக்குறை. ௪

பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடைமுடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே.

**உரைநடை** :—கெடுவீர். பற்றாங்கவை......எனில் ஓடி வம்மின் தெற்றார்....கலந்தே கூடுமின் என்க.

**உரை** :—உலகிற் கெட்டொழியுமியல்பினரே! உலகத்தே பற்றாயவைகளை ஒழித்தீராய், பற்ற வேண்டிய ஆதரவு தன்னைப்பற்றி நல்லதாகிய நெறியை அடைவோமென்று நீங்கள் எண்ணினால், ஓடி வாருங்கள். தேன் துளிக்கு மாலை யணிந்த சடைமுடியுடையவன், நிலைபெற்ற திருப்பெருந்துறைத் தலைவனாயிருப்பவனது புகழைக் கற்றுக் கற்றவாறே, அவன் திருவடியைத் தழுவின அடியாரொடுஞ் சேர்ந்து (அவனடியை) அடைவீர்களாக.

**குறிப்பு** :—ஆங்கு=அசை. உலகில் என்றும், விரைவில் என்றும் பொருள் கொள்ளலாம். பற்றும்பற்று என்பதில், பற்று=ஆதரவு. அது என்னுஞ்சொல் ஆதரவின் சிறப்புணர்த்துவது. நற்று நன்று என்பதன் வலித்தல்விகாரம். தென்+தார்=தெற்றார். தென் தேன் என்பதன் குறுக்கம். கலந்தே என்பதை, கூடுமின் என்பதோடு முடிக்க. ௫

கடலின் திரை யதுபோல்வரு கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ணம் நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான் செய்தபடிறே.

**உரைநடை** :—பின்னிரண்டடியை முதலிற் கொள்க.

**உரை** :—ஒளிபரப்புங் கதிர்களையுடைய பிறை சூடியவனாகிய திருப்பெருந்துறையிற் றங்கிய, விரிந்த சடையைக் கிரீடமாக வுடைய எங்கள் மேலோன் செய்த சூழ்ச்சி யாதெனில், கடலின் அலை



போல் ஓயாது வருகின்ற கலக்கத்தைச் செய்யும் பாசங்களைத் தொலைத்து, எனது உடம்பிலும் உயிரிலுங் கலந்து நீக்கமற நிறைந்து விளங்கினன்.

**குறிப்பு** :—சுடர்=கதிர். பரன்=மேலோன். படிறு=சூழ்ச்சி; வஞ்சகம். ௬

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும், வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளுந், தீண்டேன்சென்று சேர்ந்தேன்
மன்னு திருப்பெருந்துறை இறைதாள், பூண்டேன்புறம்
போகேன் இனிப் புறம்போக லொட்டேனே.

**உரை** :—புகழையும், பொருளையும், மண்ணுலக விண்ணுலக வாழ்க்கையையும், பிறப்பிறப்புக்களையும் விரும்பேன். தூய மங்களப் பொருளான முழுமுதற் கடவுளை விரும்பாதவரை நான் ஒருநாளும் தொடமாட்டேன். நிலைபெற்ற திருப்பெருந்துறைப் பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்ந்தேன். அவற்றை என் தலைமேற் கொண்டேன். அவற்றிற்குப் புறத்தே நான் போகமாட்டேன். இனிமேல், அவை என்னைவிட்டு அகலுவதற்கு இசையமாட்டேன்.

**குறிப்பு** :—உறுதியால் விரும்பாமைபற்றி, வேண்டேன் எனத் தனித்தனியே முற்படக்கூறினர். தீண்டேன் என்பதை யாதொரு தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டே னென்ற கருத்தைக் குறிப்பது. ஒட்டேன்=இசையேன். ௭

கோற்றேன்எனக்கென்கோ குரை கடல்வாய்அமு தென்கோ
ஆற்றேன்எங்கள் அரனே அரு மருந்தேஎன தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின் மலனேஉனை யானே.

**உரைநடை** :—முதலடியை இறுதியிற் கொள்க. ஆற்றேன் என்பதை, யானே என்பதனோடு முடிக்க.

**உரை** :—எங்கள் பாசநீக்குபவனே! அரிய அமுதே! என் மன்னனே! சேறுநிறைந்த வயல்கள் மருங்கு சூழ்ந்த, நிலைபெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் திருவெண்ணீறு நிறைந்த திருவடிவமுடைய குற்றமற்றவனே! (நீ கொடுத்த இன்பத்தைத்) தாங்கமாட்டாத யான், உன்னை எனக்குக் கொம்புத்தேன் போல்பவனென்பேனோ? ஒலிக்கின்ற திருப்பாற்கடலி லெழுந்த அமுதமென்பேனோ? (கூறுக.)

**குறிப்பு** :— கோற்றேன் = கோல் + தேன். கோல் = கொம்பு; மரக்கிளை. அதிலமைந்த தேன், மிகச்சுவையுந் தூய்மையு முள்ளது. சேற்று, சேறு என்பதன் விரித்தல் விகாரம். நீற்றும், அனையதே. ஆர்தரு = ஆரும் = பொருந்தும்; நிறையும். ௮

எச்சம்அறி வேன்நான்எனக் கிருக்கின் றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனேஅரு மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி யானாகிநின் றானே.

**உரைநடை** :—முதலடியை இறுதியிற் கொள்க; மூன்றாம் அடியை முதலிற் கொள்க.

**உரை** :—வெட்சிமலர்போன்ற சிவந்த திருமேனியுடையனாய்த் திருப்பெருந்துறை யுறையும் பெருமானாய், உறுதியாக எனது உள்ளத்தில் நிலைபெற்று அத்துவிதமாய் என்னோடுகலந்து யானாகி நின்றவனே! எங்கள் பாசநீக்குபவனே! கிடைத்தற்கரிய அமுதமே! என்னுடைய சாவாமருந்தே! நான் இன்னும் பெறவேண்டிய மிச்சத்தை அறிவேன். எனக்குள்ள குறையை அறியேன். இது அழகிது!

**குறிப்பு** :—எச்சம் = குறை; பாக்கி. செச்சை = வெட்சி; சிவந்த மலர். நிச்சம் = நித்தம்; நிச்சயமென்பதன் மரூஉ என்பார். நின்றானே என்பதை, விளியாகக்கொள்க. அச்சோ = வியப்பு; அழகு என்பவற்றை யுணர்த்துஞ்சொல். ௯

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந் தடவிமர மானேன்



தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
நான்பாவியன் ஆனால்உனை நல்காய்என லாமே. [உறைவாய்

**உரை** :—வானிற்பரவிய உலகத்தி லுள்ளவர்கள், தவஞ்செய்யவும், யான் வீணாகப் புலால்நிரம்பிய உடம்பினைத் தாங்கிக் காட்டு மரம்போலப் பயனிலே னாயினேன். தேன் பொழிகின்ற கொன்றை மலரை யுடையனாய்த் திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே! நான் (உன் பேரருள்பெறத் தகுதியில்லாத) தீவினையே னாயின், அருள்கொடுப்பாயாக என, உன்னை வேண்டுதல்கூடுமோ? (கூடாதோ.)

**குறிப்பு** :—வான்பாவிய உலகத்தவர் = விண்ணவர். அடிகள் தங்குறைக்காகத் தம்மை யிகழ்ந்து இறைவனைப் போற்றுங் குறிப்பு, இச்செய்யுளிலும் முந்திய செய்யுளிலுங் காண்க. ௧௦

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# அச்சப்பத்து

## ஆனந்த முறுதல்

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும்
அஞ்சேன், கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல்
பாதம் நண்ணி, மற்றும்ஓர் தெய்வந் தன்னை உண்டென
நினைந்தெம் பெம்மாற், கற்றிலா தவரைக் கண்டால் அம்ம
நாம் அஞ்சு மாறே.

**உரை :**—புற்றிலே வாழுகின்ற ஒளியையுடைய பாம்பிற்கும் பயப்படமாட்டேன், பொய்யர்கள் (பிறரை ஏமாற்றும் பொருட்டுச் சொல்லும்) மெய்போலும்பொய்க்கும் பயப்படமாட்டேன், தொகுதியான நீண்ட சடையைத் தரித்த எமது பெருமானாகிய நெற்றிக்கண் கடவுளுடைய திருவடிகளை யடைந்து அவனுக்கு வேறாகப் பிறிதொரு கடவுளை யிருப்பதாக நினைந்து எம்பெருமான் பொருட்டு பிற பொருட்பற்று, பிற கடவுட்பற்று என்பன நீங்காதவரைக் கண்டால், ஐயோ! நாம் பயப்படும் வகையை என் சொல்லுவோம்?

**குறிப்பு :**—வாள் என்பதற்கு, வாள்போன்ற என்றலு முண்டு. புற்றிலுறைந்து ஒளிமிக்க நாகரத்தின மணியைப்பெற்ற பாம்புகள் கொடிய விடமுடையனவாதலால் அதனை எடுத்துரைத்தார். கற்றிலாதவரை என்று பாடமுரைத்து எம்பெருமான் தன்மைகளைக் கல்லாதவரை எனவுங் கொள்ப. ௧



வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறுகாணா எம்பிரான் தம்பி ரானாந்
திருவுரு அன்றி மற்றோர் தேவரெத் தேவரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை :**—ஆசை வந்து என்னைப்பற்றினாலும் நான் அஞ்சமாட்டேன், வினையாகிய கடல் என்னைக்கவர்ந்தாலும் அதற்கு நான் அஞ்சமாட்டேன், பகைமை காரணமாக, அயன், மால் இருவருங் காண முயன்றுகாணாத எமது தலைவனாய், தனக்குத்தானே தலைவனாயுள்ளவனுடைய திருவடிவத்தை அன்றி, மற்றொரு தேவர் எத்தகைய தேவராவரென்று வெறுப்புக் கொள்ளாதவரைக்கண்டால், அது நாம் பயப்படும் வகையாகும்.

**குறிப்பு :**—வேட்கை வந்தால் வெருவரேன் என மாறுக. மாறு =மாறுபாடு. மாறுபாடுபற்றிக் காணாவெனக் கொள்க. தம்பிரானார் தம் வயமுடையவர், எல்லாப்பொருளும் அவன் திருவுரு ஆவதன்றி, அவனின் வேறாய ஒருத் தனித் தெய்வமில்லை யென்பது. அம்ம= அச்சத்தை உணர்த்தும் இடைச் சொல். ௨

வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடுகின்ற [அஞ்சேன்
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை :**— பிறர்மீது பாய்ந்து வளமையுடைய மாமிசத்தைக் கொள்ளுங் (கூர்மை யுடைய) வேலாயுதத்திற்கும் அஞ்சமாட்டேன். வளையணிந்த கையையுடைய மாதருடைய (உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்) கடைக் கண் பார்வைக்கும் பயப்படமாட்டேன். அன்பருடைய எலும்பெலா முருகும்படியாகத் திருநோக்கஞ் செய்து சபையிற் கூத்தியற்றுகின்ற பொள்ளலில்லாத எனது மாணிக்கம்போல்வானை வாழ்த்தி, இனிதாகிய அவனது திருவருளை நுகரமாட்டாத, அன்பில்லாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

87097.

கிளியனார் கிளவி அஞ்சேன் அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை:**—கிளிபோன்ற மொழியையுடைய மகளிருடைய சொல் மயக்கிற் கஞ்சமாட்டேன். அவர்களது பொய்யான நகைப்பிற்கும் பயப்படமாட்டேன். வெள்ளிய திருநீறணிந்த திருமேனியுடைய அந்தணனாகிய பெருமானது திருவடிகளை யடைந்து நீர்த்துளி சிந்துகின்ற கண்ணை உடையவராகி - வணங்கிக் கசிந்து உள்ளமுருகிக் களியுந் தன்மை யில்லாதவரை இவ்வுலகிற் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

**குறிப்பு:**—கிறி=பொய்; வஞ்சகம், இங்கு என்பதைக் கண்டாலென்பதோடு முடிக்க. அளி=அன்பு; கனிவு. உலவுமென்பது உலாமென்றாயிற்று. ஆடு=தரி; முழுகு. ௪

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பனோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான் தன் தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை :**—நோய்களெல்லாம் வந்தாலும் அஞ்சமாட்டேன். பிறப்பும், இறப்பும் நேர்ந்தாலும் பயப்படேன். மதியின் துண்டாகிய இளம்பிறையை நகையாகத் தலையில் தரித்தவனது தொண்டரோடு ஆனந்தத்தில் ஆழ்ந்து, அழகிய திருமால் வளமை உடைய நிலத்தைக் கீறித் தேடியுங் காணாத இறைவனது செய்ய பாதங்களை வாழ்த்தித் திருவெண்ணீற்றை அணியமாட்டாதவரைக் கண்டால், அம்ம ! அது நாம் அஞ்சும் வகையாகும்.

**குறிப்பு :**—துணிநிலா=துண்டு மதி. மூன்றாம் பிறைச்சந்திரன் தோன்றுங் காலத்தே சந்திரனின் பிறபகுதிகள் தோன்றாமையால் இளம்பிறையைத் 'துணி நிலா' வென்றார். அம்மால் என்பதற்கு அவ்வளவு பெருமையை யுடைய திருமாலெனவுங் கூறுவர். திணி=திண்மையுடையது. ௫



வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன் சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித் தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை :**—ஒளி நிலவுகின்ற நெருப்பிற்கும் அஞ்சமாட்டேன். மலை புரண்டுவந்தாலும் பயப்படேன். திருத்தோள்களிலே விளங்குகின்ற திருநீறுடையவனும், காளைவாகன முடையவனுமுள்ள சொல்லின் தரத்தைக் கடந்த அப்பனாகிய பெருமானுடைய திருவடிகளாகிய தாமரை மலர்களை வாழ்த்தி, பெருமை பொருந்திய அம்மலர்களைத் தலைமே லணிந்து, மனம் நெகிழும் அடிமை யல்லாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையே.

**குறிப்பு:**—ஏற்றன்=காளையை யுடையவன். பதம்=தரம். சொற்பதம் என்பதற்குப் பேசப்படுகின்ற பதவி யெனவுங் கூறுப. தாளதாமரை=தாளவென்பது குறிப்புப் பெயரெச்சம். தட=பெருமையையுடைய. ஆளலாதவர்=ஆட்படாதவர். ஒளி வீசாத நெருப்பினும் ஒளியோடு கூடிய நெருப்பு விரைவாகப் பொருள்களை எரித்துவிடுமாகலின் அதனை விதந்தோதினர். ௬

தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாதமேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை :**—நீக்கமுடியாப் பழிக்கும் அஞ்சமாட்டேன். இறப்பதற்கு முன்னமே பயப்படேன். புகையைக் கொண்ட அனலைத் திருக்கரத்தின் கண் வைத்துப், பொலிவுபெற்ற சபையின்கண் அனற்புகை வீசும்படி கூத்தியற்றுகின்ற மொட்டுகள் விரியும் கொன்றை மாலையணிந்த முதல்வனது திருவடிகளைத் துதித்து மனம் நெகிழாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

**குறிப்பு :**—தகைவு=தடுத்தல்; நீக்குதல். புகை முகந்த எரி என்பது முகந்தெரி என்றாயிற்று. முகை=மொட்டு. நகை=விரிதல்; விளங்குதல். முன்னவன்=பழமையோனெனவுங் கூறுவர். எ

தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ணமாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை:**—கட்டிய தறியைச் சினந்து அசைக்கின்ற யானைக்கும் அஞ்சமாட்டேன். தீப்பொறி போன்ற கண்ணினை உடைய புலிக்கும் பயப்படேன். தேன் மணங்கமழ்கின்ற சடையினையுடையவனாகிய தந்தையினது தேவருமறிய முடியாத வீரக்கழல்கள் செறிந்த திருவடிகளைவாழ்த்திச் சிறப்புற்று இனிய முறையிலிருக்கமாட்டாத ஞானமில்லாதவர்களைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

**குறிப்பு:**—தறி=யானைகட்டிய கம்பம். செறி=செறு. செறுதல்=தாக்குதல். மதமிகுதி, வளமிகுதி முதலியவற்றால் கட்டுத் தறியை யானைதாக்கும். சடையில் நறும்பூதரிப்பதால் வெறிகமழ் என்றார். கழல்கள் திருவடிக்கு ஆகுபெயர். அ

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும் நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்சேவே ஆண்டு கொண்டான் திருமுண்டம் தீட்டமாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை:**—மேகத்தில் உண்டாய் நிலவுகின்ற இடிக்கும் பயப்படமாட்டேன். சமயத்திற்கைவிடக்கூடிய அரசருடையநட்பிற்கும் பயப்படமாட்டேன். விடத்தை அமுதமாக உட்கொண்ட இறைவனாகிய நமது தலைவன், மிகச் செவ்வையாக நம்மை யாட்கொண்டவன். செல்வமாகிய அவனது திருவெண்ணீற்றை நெற்றியில் அணியமாட்டாது அதற்குப் பயப்படுகின்றவர்களைக்கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையேயாகும்.

**குறிப்பு:**—திரு=செல்வம். அதாவது திருவெண்ணீறு. விபூதி என்ற சொல்லும் இக்கருத்தையுடையது. முண்டம்=நெற்றி. முண்டம், திரு, தீட்டமாட்டாவென முடிக்க.



கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

**உரை:**—கொலைத்தன்மையுடைய அம்பிற்கும் அஞ்சமாட்டேன். யமனுடைய கோபத்திற்கும் பயப்படேன். நீண்ட பிறையினை நகையாகச் சூடிய பெருமானை எண்ணிக்கசிந்து மனம் நெகிழ்ந்துருகி ஒளியுடைய கண்கள் நீரைச் சிந்தும்படி துதித்து உறுதியாய் வழிபடமாட்டாத ஆண்மையுடையர் அல்லாதாரைப் பார்த்தால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

**குறிப்பு :**—கோள்=உயிரைக் கொள்ளுந் தன்மை. அதாவது கொலைத்தன்மை. பிறையி னகலத்திலும் அதன் நீளம் அதிகமானதால் நீள்நிலா என்றார். வாள் நிலாவு மென்பது வாள்நிலாவென்றாயிற்று. சோர=வடிய. ஏத்தமாட்டா என்பது வழிபடமாட்டா என்ற ௧0
பொருளில் வழங்கியது.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பாண்டிப் பதிகம்

## சிவானந்த விளைவு

### கட்டளைக் கலித்துறை

*திருச்சிற்றம்பலம்*

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்று மிலாதவரைக் கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே.

**உரை:**—பெரிய மலையாகிய இமயமலை யரசன் புதல்வியைப்பாக மாகவுடையாரைப், பாண்டிய மன்னனுக்குப் பெறுதற்கரிய அமுதமான ஒப்பற்றவரை, பெயர், வடிவு முதலிய ஒன்றும் இல்லாதவரை, நான் தமது திருவடி மலரைவணங்கும்படி வெளிப்பட்டு நின்று மனத்தை உருகுவித்துக் குதிரை மேல் ஏறிவந்த வீரர் ஒருவரையல்லாது பிற எவருடைய வடிவத்தையும் என் உள்ளமானது அறிய மாட்டாது.

**குறிப்பு:**—பரு=பருத்த; பெரிய. வரை=மலையரசன். மங்கை= புதல்வி. இறைஞ்சி=இறைஞ்ச. உரு என்பதற்கு இயல்பு என்றும் பொருளுரைப்பர். க

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

**உரை நடை:**—இரண்டாவது மூன்றாவது அடிகளை முதலிற் கொள்க.



**உரை:**—கதிரவனைத் தன் ஒளிமிகுதியால் மறைத்தாலன்னசெஞ்சோதியானவன் மூவிலைச் சூலத்தைக் கையிற்கொண்டு, குதிரைமேல் ஏறி வெளிப்பட்டு நமது நடுவே வந்து கூடிவிடுவானாயின், அவனைக் கண்டவர்களது பிறப்பு நாசமாகும் என்றறிவீர்களாக. அவனை அடைந்தவர்கள் தமது திறமையை மறந்து ஞானப்பித்துக் கொள்ளுவார்கள். உறுதியாக (ப்பறை, சாற்றினாற்போலச்) சொன்னோம். மதுரை வாழ்கின்றவர்களது அரசனாகிய பாண்டியனது மறுபிறப்பினை மேல் நிகழவொட்டாதபடி அச்சோதியானவன் தடுத்து விடுவானாயினன்.

**குறிப்பு:**—சதுர்=திறமை. தற்போத மிழத்தலையே சதுரை மறத்தலாகக் கூறினர். சிவஞான அவாவே அறிமால் எனப்பட்டது. கழுக்கடை=சூலம்; மூவிலை வேல். குடிகேடு=குடியின் முடிவு; அதாவது பிறவியின் அழிவு. ஓட=மேல் நிகழ. மறு பிறப்பாகிய ஓடத்தை மேற்செல்லாது தடுத்து விடுமென்றலுமொன்று. உ

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்
கொண்டீர், பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட
பாண்டியனார், ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்
டரை உள்ளங் கொண்டார், பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ
லேசென்று பேணுமினே.

**உரை:**—நீங்கள் இன்பச் சுனையில் நீந்திக் குளிக்கின்ற எண்ணமுடையீர் ஆயின், உலகத்தை யெல்லாம் ஆனந்த வெள்ளம் மூடிக் கொள்ளும்படி குதிரைமேல் ஏறிவந்த பாண்டியனாராகிய பெருமான், ஒப்பற்ற பேரின்ப வெள்ளமே திருவுருவாகக் கொண்டுவந்து அடியவரது உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார். பேரின்ப வெள்ளத்துள் விளங்கும் அவனது வீரக்கழல் நிறைந்த திருவடிகள் பாற்சென்று அவற்றையே வழிபடுவீராக.

**குறிப்பு :**—இன்பப் பெருக்கை விரும்புவார், இறைவன் பேரின்பச் சேவடியே நாடவேண்டுமென்பது குறிக்கப்பட்டது. பார்= நிலம்; பூமி. தொண்டரை=தொண்டருடைய. உருபு மயக்கம். ௩

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னன்நன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக் காலம்எக் காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள இருநிலத்தே.

**உரைநடை:**—முதலடியில் 'செல்லன்மின்' என்பதுவரை, இறுதியிற் கொள்க.

**உரை :**—பாண்டியனது நல்ல நாட்டிலே கடவுள் புறப்பட்டு விளங்குகின்ற காலம் இது எக்காலத்திலும் நல்ல காலம், இறைவன், அறிவாகிய ஒளிக்கதிர் வீசும் வாளினை உறை நீக்கி யெடுத்துக் கொண்டு, ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்தி, எதிர்த்தவர்கள் மண்மிசை விழுந்து புரண்டு பணியும்படியாக அவர்களது பிறப்பை வாள் வீசிச் சேதிப்பன்; ஆதலால், மிகுதியாக அடரும் பிறவிக்கு இணக்கமானவர்கள் அவர் முன் செல்லா தொழியுங்கள்.

**குறிப்பு :**—எக்காலத்துள்ளும் என்பதை எறியும் என்பதனோடு முடித்தலுமுண்டு. செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின், என்பதற்கு, அடரும் பிறவியைத் தொலைத்தற்குக் கடவுள் நல்லவர். பிறவி தொலைய விரும்புவர், புறநாட்டிற்கு இக்காலத்தே செல்லாதீர்களென்றலு மொன்று. எதிர்ந்தார் பிறப்பை எறியும் எனமாறுக. எதிர்ந்தார் இரு நிலத்தே புரள, எனமாறுக. ச

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.

**உரை:**—(உய்தி கூடுங்) காலம் கிடைத்திருக்கும்போதே அன்பு செய்து பிழையுங்கள்; நினைத்தற்கரிய பெருமையுடைய மண்ணினை யுண்ட திருமாலும் அயனும் பிற தேவர்களும் அடைதற்கரிய ஆலகால விடத்தை யுண்ட எங்கள் பாண்டி நாயகன், தனது அடியவர்கட்கு மூலமாகவுள்ள நிதியினை எடுத்தளிக்கின்றான். விரைந்து வந்து முற்படுங்கள்.



**கல்லால் நிழல்மலை - வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர் - நல்லார் புனைவரே.**

**(உரை)** கல்லால் நிழல் - அருள் வடிவாகிய கல்லால் நிழலின் **கண்ணே** எழுந்தருளி யிருந்து,—மலைவு இல்லார் - நந்தி பெருமானுக்கு இந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர்,—அருளிய - மேன்மேற் கருணை கூர்ந்தருளுதற்பொருட்டு,—பொல்லார் இணைமலர் - பொல்லாத (=பொள்ளாத) பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தி யென்னும் இரண்டு திருவடித் தாமரைகளை.—நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்,—புனைவரே-தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோல் அடங்கி நிற்பர்.

நல்லார் புனைவரெனவே, ஏனையோர்க்கு அது கூடாதென்றவாறாயிற்று. மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்ததெனக் கொள்க.

அருளியவென்பது செய்யியவென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; அது புனைவரென்னும் பிறவினை முதல்வினை கொண்டது. இல்லார் இல்லாகச் செய்தாரெனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர். அருளிய பொல்லாரெனப் பெயரெச்ச முடிபாக வைத்துரைப்பினுமமையும். மலைவில்லாரருளப் பொல்லார்தாள் புனைவரெனவே, அவ்விருவருந் தம்முள் வேற்றுமையின்மை பெற்றாம், உலகத்துப் புதல்வர்கள்மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேருவகை பயப்பிக்குமாகலின், அந்நயம் பற்றி அங்ஙனங் கூறியதூஉமாம்.

## அவையடக்கம்

**தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்**
**எம்மை உடைமை எமையிகழார்—தம்மை**
**உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்**
**புணராமை கேளாம் புறன்.**

இஃது அவையடக்கங் கூறுமுகத்தானே ஈண்டெடுத்துக் கொண்ட சித்தாந்த சைவத்தினுயர்வும் ஏனைச் சமயத்தார்களது இழிபுங் கூறுகின்றது.

**(உரை)** தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார் - உடைப் பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து தம்மை யுடையா

னாகிய தலைவனை யுணருஞ் சித்தாந்த சைவர்,—எம்மை உடைமை எமை இகழார் - தமக்குடைப் பொருளாகிய எம்மை யுடையராகலின் எம்மைக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி இகழ்தல் செய்யார்; ஆகலான் எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வர்.—தம்மை உணரார் உணரார் - அங்ஙனந் தம்மை யுணராதார் தம்மையுடையானாகிய தலைவனையும் உணரார் ஆகலான்,—உடங்கு இயைந்து தம்மிற் புணராமை - அவர் ஒருங்கே சூழீஇக் கொண்டு தம்மிற்றாமே சேராது முரணுதலால்,—புறன் கேளாம் - அவர் எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைக்கும் புறமொழியை யாம் பொருளாகக் கொள்ளாம்.

தம்மை யுணராரெனப் பொதுப்படக் கூறுதலானே, தாம் ஒரு பொருளுண்டென்பதே உணராத உலகாயதரும், தம்மைக் குணிப் பொருளென்றுணராத புத்தர் சாங்கியர் மாயா வாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைப்பொருளென்றுணராத ஏனைச் சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவித சைவரும், தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுபரிமாணங் கோடலானும், உடையானுக்குப் பரிணாமங் கூறுதலானும், உடையானல்லாதானை உடையானென மயங்கிக் கோடலானும், சிவாத்துவித சைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணாமங் கூறுதலானும், பிறவாற்றானும், அவருந் தம்மை உணராரே யென்பது. புறன் - புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்கு மொழியும் புறங்கூற்று மொழியு மென்பது இரட்டுற மொழிதலென்னும் உத்தியாற் கொள்க. புறங்கூற்று மொழியாவது முக்கூற்றுப் புறச்சமயங்களின் வேறான பாடாணவாத சைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறுமொழி என்க.

# க-வது பொது இயல்பு

## பிரமாண இயல்

### முதற் சூத்திரம்

ஈண்டு ஆசிரியர், முதனூலிற் கூறியவாறே சிவாகமங்களினோதப் படும் ஞான பாதப்பொருளெல்லாவற்றையும் பொது உண்மை யென்று இரண்டாகத் தொகுத்துப் பிரமாணவியல் இலக்கண வியல் சாதனவியல், பயனியலென நால்வகைப்படுத்து, பிரமாணவியல் மூன்று பாதத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் உலகிற்கு முதற் கடவுள் சிறப்பு வகையானுண்டென்னும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப் பிரமாணங் கூறுகின்றார்:

அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

*சூ—சங்காரகாரணனா யுள்ள முதலையே முதலாக வுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

இது சூத்திரக் கருத்துரைக்கின்றது. நிவிர்த்திகலை முதலிய பஞ்ச கலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினை முதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற் கடவுளாக உடைத்து அவனவளது வென்று இவ்வாறு சுட்டி யுணரப்படுவதாய உலகம் என வேதாகமங்களுட் கூறப்படுவதனை அநுமானவளவையானுணர்த்துதலைக் கருதிற்று இச் சூத்திரம்.

---

***குறிப்பு :**—சூ = என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின்.
மே = என்பது மேற்கோள் என்னுதலிற்றோவெனின்.
ஏ = என்பது ஏது என்னுதலிற்றோவெனின்.
உ = என்பது உதாரணம் என்னுதலிற்றோவெனின்.

இதன்பொழிப்பு உரைத்துக்கொள்க.

இஃது இவ்வுரைமுகத்துக் கேட்போரால் உரை வகைபற்றிச் செய்துகோடற்பால தொன்றனை அறிவுறுத்துகின்றது. இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு முன்னர்க் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரைபற்றி உரைத்துக்கொள்க. எனவே, இங்ஙனம் இருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரை மாத்திரையேயாமீண்டுரைக்கின்றாம்; பிண்டமாகக் கொண்டுரைப்பதாய பொழிப்புரை இதுபற்றி யுணர்ந்து கோடல் எளிதாகலின், அஃதியாமுரைக்கின்றிலம் என உரைமுகத்து மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறாயிற்று. இஃது, ஏனைச் சூத்திரங்களினும் உய்த்துக்கொண் டுணர்தற்பொருட்டு, முதற்கண் வைக்கப்பட்டது. இவ்வாறு ஆசிரியர் ஆணை தந்தமையின், கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

(அவன் அவள் அது எனும் அவை...புலவர்.) - அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சத் தொகுதி, தோற்றம் நிலை இறுதியென்னும் முத்தொழிலுடைமையால், ஒருவனாற்றோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது, தோன்றுங்கால், தானொடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும், சகசமல நீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாறாகலின், சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற்கு முதற் கடவுள்; ஏனையோர் அன்னரல்லர் எனக் கூறுவர் அளவை நூலுணர்ந்தோர்.

காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்குண்மை கூற வேண்டுதலின், தோற்றிய திதியே யெனவும், ஒடுங்கி யுளதாமெனவும், உலகின்மேல் வைத்துக் கூறினார்; கருத்துரையுட் கூறியதூம் அது நோக்கி. இச்சூத்திரத்துள் அவனவளதுவெனும் அவைமூவினைமையின் என்பது ஓரதிகரணம்; தோற்றிய திதியே யொடுங்கியுளதாம் என்பது மூன்றதிகரணத்தை யுள்ளடக்கி நிற்பதோரதிகரணம்; அந்தமாதி யென்மனார் புலவர் என்பது ஓரதிகரணம்; ஆக முக்கூற்றது இச்சூத்திர மென்றுணர்க. இம்மூன்றும் முறையே ஒன்றற்



கொன்றேதுவும் பயனுமாய் ஒரு பொருண்மேல் வருதலின், ஒரு சூத்திரத்தாற் கூறினார். தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிவும், இயைபுமென்னும் இவற்றது நிலைக்களம் ஈண்டு அதிகரண மெனப்படும்.

## முதலதிகரணம்

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது.

மே—மூவினையுடைத்தோ அன்றோ என்னும் ஐயப்பாட்டின்கண் நித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத் தென்றல் பொருந்தாது என மீமாஞ்சகரும் உலகாயதருங் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடல் நுதலிற்று. ஒருவனென்றும் ஒருத்தி யென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும் பல வேறு வகைத்தாய்ச் சடமாயுஞ் சுட்டி யறியப்படுவதாயு மிருத்தலின் இம்மூன்றேதுவானும் பிரபஞ்சந் தோன்றி நின்றழியுமென்பது துணியப்படுமென்பார், உளதா யொருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென உடம்பொடு புணர்த்தோதினார். உளதாய்ச் சுட்டப்பட்ட எனவியையும். உளதாகச் சுட்டப்படுதல் முயற்கோடு முதலியன போலத் திரிவையங்களானன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

தோற்றமும் ஈறும் உள்ள தன்பாலே கிடத்தலின்.

ஏ—காட்சியளவைக்கு எய்தாதுரைப்பனவெல்லாம் பிரமாணமாகாவென உலகாயதர் கூறுங்கடாவை யாசங்கித்துக் காட்சியளவை பற்றியும் மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. உற்பத்தியும் நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக்கிடத்தலின் உளதாயொருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என மேற்கொண்டது.

பூதாதி ஈறும் முதலும் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ

*ஒன்றொன்றில் தோன்றி உளதாய் இறக்கண்டும்*
*அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து.*

உ—உள்ளதன்பால் அவ்விரண்டும் கிடத்தல் யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதல் நுதலிற்று. பேதாய் - காட்சியளவைகளானும் அறியப்படாத மடவோனே,— பூதாதி - பூத முதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு,—திதி ஈறும் முதலும் துணை ஆக ஆகும் - திதி, நிகழ்வழி, நாசமும் உற்பத்தியுந் தனக்குத் துணைக் காரணமாகக்கொண்டே நிகழா நிற்கும். அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழியக் கண்டிலமாலெனின்,—ஒன்று ஒன்றின் பெற்றிமையின் தோன்றி உளதாய் இறக்கண்டும் - ஒவ்வொரு காலவிசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கேயழிவதனைக் கண்டு வைத்தும்,— என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ - என்றாயினும் அதற்குரிய காலம் வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சி பற்றி ஆராய்ந்து சொல்லார்களோ உன்னைப் போலும் மடமையில்லாதோர்.

ஒன்றொன்றிற்றோன்றி யுளதாயிறுதலாவது *"பயில்வித்தெல்லாங் - காரிட மதனிற் காட்டுமங்குரங் கழியும் வேனில்" என்பதனானறிக.

## இரண்டாமதிகரணம்

*இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒடுங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை யென்றது.*

என இங்ஙனஞ் சொற்பல்காமைப் பொருட்டுத் துணிந்ததாக வைத்துரைத்தாராயினும், பொருளியைபிற்கேற்ப இதனை மூன்றதிகரணமாக வைத்துரைப்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க; அஃதாமாறு காட்டுதும் :—

இனி உலகமுள்ளது என்றது.

மே—உலகம் இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றியழிதல் இயல்பென்றலே அமைவுடைமையின், அது மூவினையுடைத்

* சிவஞான சித்தியார், முதற் சூத்திரம். செ - ௯. ஓரிடமழிய,



தாயினும் தோற்றுவானொருவனை யுடைத்தாதல் செல்லாது எனப் புத்தநூலார் சொல்லுங் கடாவையாசங்கித்துத் திதியென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

*இல்லதற்குத் தோற்றமின்மையின்.*

ஏ—உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து முற்பத்தி யின்மையின் ஈண்டுற்பத்தி காணப்படுதலான் உலகமுள்ளது என மேற்கொண்டது.

(இனி உலகஞ் செய்வோனையுடைத்து என்றது.)

மே—உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தத்தமுதற் காரணத்தினின்றுந்தானே தோன்றியழியும் இதற்கொரு நிமித்த காரணமாய் ஒரு கருத்தா வேண்டாம் எனச் சாங்கியர் கூறுங் கடாவை யாசங்கித்துத் தோற்றிய வென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

*உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்.*

ஏ—அதற்குப் பிரமாண மென்னை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. மண்முதலியவற்றினுள்ளதாகிய கடமுதலிய பொருட்குக் குயவன் முதலிய செய்வோரையின்றி வனைதல் முதலிய செய்தொழில் நிகழாமையின், உலகம் இவ்வியல்பிற்றாகலான் இனி இவ்வுலகஞ் செய்வோனை யுடைத்து என மேற்கொண்டது.

*(இனி) ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது.*

மே—இத்துணையுங் கூறியவாற்றான் உலகத்தைத் தோற்றுவிப்பான் உண்டெனப்பட்ட கருத்தாத் திதிகருத்தா சிருட்டி கருத்தா முதலியோரில் ஒருவனே யாதலமையும் எனப் பாஞ்சராத்திரி முதலியோர் கூறுங்கடாவை யாசங்கித்து ஒடுங்கியுளதா மென்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றி உளதாகாது.

(ஆண்டு ஒடுங்குதலின்).

ஏ—அதற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று. யாது யாண்டொடுங்கும் அஃததனி லுற்பத்தியாம் மண்ணிற் குடம்போலும் என்னும் அவினாபாவத்தாற் பிரபஞ்சம் சங்காரகாரணன் மாட்டொடுங்குதலின், மீளத் தோன்றுங்கால் ஆண்டு நின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது.

இவ்வாறு மூன்றதிகாரணப் பொருளும் இதன்கட்போந்தவாறும் இவ்வாறுரையாக்காற் பொருளியைபு படாமையும் நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

இலயித்த தன்னில்இல யித்ததாம் மலத்தால்
இலயித்த வாறுள தா வேண்டும்

உ—உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாக வேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாதம் அடாதுஎனப் புத்தர் கூறுங்கடாவை யாசங்கித்து இல்லதற்குத் தோற்றமின்மையி னென்றவேதுவை வலியுறுத்துதல் நுதலிற்று. இலயித்தது இலயித்ததன்னில் ஆம் - உள்ளதாயினுஞ் சங்கார காலத்தினொடுங்கியதாகலான் அவ்வொடுங்கியவுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக்காலத்தின் மீளவுளதாம் (அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது, மீளவுண்டாக வேண்டாம். வேண்டுமாயின், முன்னொடுங்காது நிலைபெறவே யமையும்:) அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்,—மலத்தால் - உள்ளதாகிய உலகம் கரும மலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுங்கி, ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டு மீளவுமுண்டாம். அற்றேல் முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறு தோன்றுமென்னாமல் அதுவே ஒடுங்கி நின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனில்,—இலயித்தவாறு உளது ஆவேண்டும் - எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கியவாறே உளதாதல் எல்லாரானும் விரும்பப்படும்.

எனவே அந்நியமில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏதுவென்னை யென்னுந் தருக்கமே அதனை யறிவுறுத்து



மென்றவாறாயிற்று. சற்காரிய வாதத்தினியல்பு *"தந்து முதல் காரகம்" என்னும் ஞானாமிர்தத்தினுங் காண்க.

இதனானே, இல்லது முள்ளதுமல்லாத பொருள் தோன்றுமென்னுஞ் சூனிய வாதிகளும், இல்லதுமுள்ளதுமாய பொருள் தோன்றுமென்னும் அநேகாந்த வாதிகளும் மறுக்கப்பட்டவாறறிக.

—இலயித்தது

அத்திதியில் என்னின் அழியா தவையழிவ(து)
அத்திதியும் ஆதியுமாம் அங்கு.

உ—இனிச் சற்காரிய வாதத்தின் அவ்வக்காரியங்கள் தத்தம் முதற் காரணத்தொடுங்குமெனவே கோடலின் உலகிற்கு முதற் காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவனுருவாகலான், உலகம் அவன் மாட்டொடுங்குமென்றலே அமைவுடைத்தன்றி முதற்காரணத்தின் வேறாய நிமித்த காரணமெனக் கொண்ட சங்கார கருத்தாவின் மாட்டொடுங்குமென்றல் பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங் கடாவை யாசங்கித்து ஒடுங்கின சங்காரத்தின் எனவும் இலயித்ததன்னில் எனவுங்கூறிப் போந்தகுறிப்பேதுவை வலியுறுத்துதல் நுதலிற்று. இலயித்தது அத்திதியில் என்னின் - உலகமொடுங்கியது அந்த மூலப்பகுதி வடிவாய திதிகருத்தாவின்கண் என்பையாயின்,—அவை அழியாது - நீ அங்ஙனங் கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங்கள் அதனால் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள ஏகதேச மாத்திரையே ஆண்டொடுங்குவதன்றி மாயா காரியத் தொகுதி முழுவதும் ஆண்டொடுங்காது. அற்றேல், மாயாகாரியத் தொகுதி முழுவதும் ஆண்டொடுங்குவதெனின்,—அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது - அந்தத் திதிகடவுளும் படைப்புக்கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக் கடவுளிடத்தே அவ்விருவரோடுங்கூட அழிவதாம் அத்தொகுதி.

இவ்வெண்பாவினை இரண்டதிகாரணப் பொருள்படுமாறு இருதொடராக வைத்துரையாக்காற் பொருளியைபு படாமையறிக. இரணிய கருப்ப மதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக் கடவுளையும் உடன் கூறினார். நிமித்த காரணனாகிய முதல்வன் உலகிற்கு

* அகவல் - ௨௨.

முதற் காரணன் அல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டு நின்று தோன்றுதல் அமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

**வி**த்துண்டாம் மூல முளைத்தவா தாரகமாம்
அத்தன்றாள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம் [த்து
வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடு
கூட்டானே மண்போற் குளிர்ந்து.

உ—உலகந்தனக்கு முதற் காரணமாகிய மாயையினொடுங்குவதன்றி, நிமித்த காரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும், அவன் மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமையின், யாது யாண்டொடுங்கும் அஃததனிலுற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தான், "மாயையின் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும் இதற்கோரிறைவன் வேண்டா" எனச் சாங்கிய நூலார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னும் ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

மண்போல் குளிர்ந்து வித்து உண்டாம் மூலம் முளைத்தவாதாரகம் ஆம் அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்தகம் ஆம்-மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின், வித்துக்கு ஆதாரமாகிய நிலங் குளிர்ந்தவழி, அதன்கண் வித்துள்ளதாக அதனினின்றும் அங்குரந் தோன்றியவாறுபோல மேலை வெண்பாவின் இலயித்தது என்றதனாற் பெறப்பட்ட மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின்கணுள்ளதாய் நிற்றலால் அச்சத்தி சங்கற்பித்த வழி அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுர்ப்பாடுடைத்தாம்: அல்லுழி உடைத்தன்று. நிலங் குளிர்ந்தவழி அதன்கட்கிடந்தன்றி வித்து முளையைத் தோற்றாதவாறுபோலும்; ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய்நின்ற இறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம். இது கிழங்கினின்றுந்தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானுமறிக. வழி நூலாசிரியர் *"உயிரவை

* சிவஞான சித்தியார், முதற் சூத்திரம். ௩௨. உயிரவையொடுங்கிப். ௪௮. உலகினையிறந்து.



யொடுங்கிப் பின்னு முதிப்பதே னரன்பால்." "உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடும்." என ஓதியதூஉம், உலகவனுருவிற் றோன்றி யொடுங்குமாறு வாதுளாகமத்தில் வகுத்தோதியதூஉம் இவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியாதார் இன்னோரன்னவற்றைத் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. உவமவினை பொருளினும், பொருளடை உவமையினுஞ் சென்றியையும். உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்துதல், வித்தில்வழி நிலத்தினின்றும் அங்குரந் தோன்றாதவாறுபோல மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந் தோன்றாதெனப் பரிணாம வாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்து நிலனும்போலென்றதனான் மாயை முதல்வனின் வேறு பொருளன்றென்னுஞ் சிவாத்துவித சைவர் பாஞ்சராத்திரிகளையும் மறுத்தவாறாயிற்று. முதல்வன் பல வேறுவகைப் படச் சங்கற்பித்தவாறென்னை என்னுங் கடாவை யாசங்கித்து, அவர் வினையாலென்றார். வித்தகம் விசித்திரமென்றுரைப்பினுமமையும்.

அற்றேல், தன்வயத்தானன்றி வினைவயத்தாற்றோற்றுவிப்பான் இறைவனாகானெனின், வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டு உருவைத்தான் கொடுத்துக் கூட்டானே - வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல இறைவனும் அவரவர் வேண்டு முருவினைக் கொடுத்து, அவ்வினைக்குத் தக்க பயன்களையுங் கூட்டுவனாகலான், அது கொண்டு சுதந்திரத்திற் கிழுக்கென்னை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
தாக்காது நின்றுளத்தில் கண்டிறைவன்—ஆக்காதே
கண்ட நனவுணர்வில் கண்ட கனவுணரக்
கண்டவனில் இற்றின்றாம் கட்டு.

உ—மேலையுதாரணத்திற் கூறியவாற்றான் உலகிற்கு முதற் கடவுள் உண்டெனக் கொள்ளினும் அவன் படைப்பு முதலிய தொழில் செய்வானாயின் விகாரமெய்தி அதனிற் பந்தமுறுவானென்னுமவர் மதம் பற்றி நிகழுங் கடாவையாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதல் நுதலிற்று. இறைவன் - முதல்வன்,—காலத்தில் தாக்காது நின்று - இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத் தொழிலுஞ் செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங்

காலம்போல விகாரப்படாது நின்று,—ஆக்காதே கண்டு - பிரபஞ்சத்தைக் கரணத்தாற் படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து, நோக்காது நோக்கி நொடித்து - அவ்வாறே காவாது காத்து அழியாதழித்தலால்,—இன்று ஆம் கட்டு - இவ்வமலனுக்குப் பந்தமின்றாதல்,—உளத்தில் கனவு கண்ட கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனில் இற்று - கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்திற்றோன்றுங்கால் உள்ளம் அவற்றிற்றொடக் குண்ணுதவாறுபோலும் கனவின்கட் கண்டவற்றைப் புறத்து விடயங்களை யறிந்து வந்த நனவுணர்வின் கண்ணே விளங்கவறிந்தவன் அப்பொழுது அவற்றிற்றொடக்குண்ணுதவாறுபோலு மித்தன்மைத்து.

எனவே, இஃதிவ்வாறாக வென்றெண்ணுதலாகிய சங்கற்பமாத்திரையாற் செய்வதூஉம், கரணத்தாற் செய்வதூஉமென வினைமுதல் இருவகைப்படு மென்பதூஉம், கரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்ப மாத்திரையாற் செய்யும் முதல்வனுக்கு வினை முதலாதற் பொதுமை பற்றி ஒரு புடையுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமையானும், சங்கற்ப மாத்திரையாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப் பொருளாகலானும், அவை யாண்டுளவாதற் கோரியை பின்றென்பதூஉம் கூறி எதுவை வலியுறுத்தவாறு காண்க. ஆக்குதல் படைத்தல். காண்டலும் அது. நோக்குதல் காத்தல். நொடித்தல் அழித்தல். அது *"நொடித்தான்மலை" என்பதனானுமறிக.

ஆக்காது நோக்காது என்றமையால் நொடியாதென்பது வருவித்துரைக்கப்பட்டது. நொடித்தலாவென்பது நொடித்தெனத் திரிந்தது.

## மூன்றாமதிகரணம்

இனிச் சங்காரமே முதலென்றது.

மே—'ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை' எனவே சங்கார கருத்தா உலகிற்கு முதற் கடவுளென்பது போந்ததாயினும் தேர் முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலின் அவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றுமத் தன்மையராய முதற்

* சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் - திருநொடித்தான் மலைப் பதிகம்.



கடவுளர் உண்டெனக்கோடும் என்னும் அநேகேசுர வாதிகள் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. சங்கார கருத்தா ஒருவனே உலகிற்கு முதற் கடவுளென்றது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின வழி யல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

ஏ—அதற்குப் பிரமாண மென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. ஒன்றொன்றாய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென்றிருவேறு வகைப்பட்ட பிரபஞ்சம் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றாயறிந்து நின்ற சங்கார கருத்தாவின் வழிப் பாதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றாகலாற் சங்கார காரணனொருவனே உலகிற்கு முதற் கடவுளன்றி ஏனையோர் முதற் கடவுளரல்லரென மேற்கொண்டது.

பிரபஞ்சத்திற்குச் சுதந்திர மின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திர முண்மையும் ஏது முகத்தாற் காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவும், சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமெனவும், ஈரிடத்தும் உடம்பொடு புணர்த்தோதினர். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம். ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப் பிரபஞ்சத்தை; பிரிநிலை யேகாரத்தான் விலக்குதற்குரியது அதுவேயாதலின். தேர் முதலாயின பலராற் செய்யப்படினும் அப்பலரும் ஒருவனேவல் வழி நின்றே செய்பவாகலானும், வேதத்துட் காரண வாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணிய கருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணமென்றது குயவன் போல் அவாந்தர காரணமாதல் பற்றியே யாகலின், அவை யெல்லாம் ஆகுபெயராற் சங்காரகாரணனாகிய முதற் கடவுளையே யுணர்த்திநிற்கு மாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினை முதலாய் நிற்கும் முதற் கடவுள் சங்காரகருத்தா வொருவனே யென்பது கருத்து.

ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவா(று)
ஒன்றலா வொன்றிலதை யீறுதல்—ஒன்றலா

ஈறே முதலதனின் ஈறலா வொன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு.

உ—அங்ஙனமாயினும் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினுற்போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவுளவெனக் கோடும், ஒன்றே யென்றற்குப் பிரமாணமென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து எதுவை வலியுறுத்துதனுதலிற்று. அவை - சேதனப் பிரபஞ்சத்தொகுதி,—ஒன்று அலா ஒன்றால் உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே,—உளது ஆகி நின்றவாறு - சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே, —ஒன்று அலா ஒன்றில் ஈறுதல் - அந்தப் பரம்பொருளின் கண்ணே சங்காரப்படுதலால்,—ஒன்று அலா ஈறே முதல் - அச்சங்காரக் கடவுளொருவனே உலகிற்கு முதற் கடவுள், அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப் பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாமென வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளா மென்றற்கு இழுக்கென்னை யெனின்;—அதனில் ஈறு அலா ஒன்று - அப்பரம்பொருள் போல் அழிவின்றி நித்தமாய சேதனப் பிரபஞ்சம்,—அங்கு - வீடுபேற்றின் கண்ணும்,—பலவாறே தொழும்பு ஆகும் - பலவாற்றானும் பரம்பொருளுக்கு அடிமையாம்.

காரியப் பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப் பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒரு முதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திர காரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறு நடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளும் சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்களுடைய னென்பதூஉம் பெறப்பட்டது. படவே, இத்தன்மையனாகிய முதற்கடவு ளொருவனே அமையுமாகலின் வேறுமத்தன்மையருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலாவொன்று என வரையறுத்தோதினர். பலவாறாவன, இருணீங்கிய வழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றையின்றி யமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய் உடனின்றறிவிக்கு முதல்வனையின்றியமையாதவாறும், கண் படிகம் ஆகாயம் போலச் சார்ந்ததன் வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்து நிற்குமியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாமுரிமையின்றிச் சிவாநுபவ மொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவசமமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னை யெனின்; அஃது உண்மையதிகாரத்துட் பெறப்படும். இதனானே சிவசமவாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன.



பதியுண்மைக்குப் பிரமாணங் கூறுவார் மலத்துளதாம் எனப் புனருற்பத்திக் கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமும் உடன் கூறினார். அதனை ஈண்டு வேறோரதிகாரணமாக வைத்துரையாராயினார்; அதிகாரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியன வெல்லாஞ் சகசமலத்துணராதென அதனிலக்கணங் கூறும் வழிப் பெறப்படுதலால், ஈண்டு மிகைபட வேறோதல் வேண்டாமையின்.

இச்சூத்திரத்ததிகரணங்களாற் போந்த தொகைப் பொருளாவது:—தோற்றக் கேடுகளதுண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளேயாம். அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும், இல்பொருள் தத்தஞ் சார்பிற்றோன்றி நின்றழிதல் இயற்கை யெனவமையும்; செயற்கை யென்றற்கு ஓரேது வின்மையின். மற்றுள்பொருளாயின், அதுவே யமையும் இறைவன் வேண்டா; இரண்டுள் பொருள் கோடல் மிகையாகலின். வேண்டுமாயினும், மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனே யமையும், அவரை யொழித்துச் சங்காரகருத்தா முதற் கடவுளென்றற்குப் பிரமாணமென்னை? பிரமாண முண்டாயினும், அதிவிசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனாற் செய்தல் கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல் வேண்டும் என உலகாயதர் மீமாஞ்சகர் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்சராத்திரிகள் அநேகேசுரவாதிகள் மதம்பற்றிப் பூருவபக்கம் நிகழ்ந்தவழி அவரை மறுத்துச்

சித்தாந்தஞ் செய்து முதற் கடவுளதுண்மை பொது வகையானுஞ் சிறப்புவகையானுங் கருதலளவையின் வைத்துணர்த்தியவாறென உணர்க. இவ்வாறு சூத்திரந்தோறும் உணர்ந்துரைத்துக் கொள்க.

---

## இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே யாய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

சூ—புனருற்பவம் வருமாறுணர்த்துதனுதலிற்று. சூத்திரக் கருத்துணர்த்துதனுதலிற்று.

உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வகுத்துணர்த்து முகத்தானே துணைக்காரணம் முதலியன இல்வழி இறைவன் உலகிற்கு நிமித்த காரணனாதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து அவற்றதுண்மைக்குப் பிரமாண முணர்த்துதனுதலிற்று இச்சூத்திரம்.

சூத்திரவியையும் இதனானே விளங்கும்.

ஒடுங்கியுளதா மென்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாவது எவ்வாறென்று அவாய் நிற்றலின், அவ்வவாய் நிலைபற்றிப் புனருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

இச் சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு :—

மேலைச் சூத்திரத்து எடுத்துக்கொண்ட சங்கார காரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய் பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நின்று ஆணை யென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன் என்க.

**Supplement to this Issue :—**

உ
சிவமயம்.
ஸ்ரீ ஜ்ஞானசம்பந்த குருப்யோ நம :

# பெரியபுராணம் மூலமும்,

## சித்தாந்தபோத ரத்திநாகரமெனப் பெயரிய பொழிப்புரை, விசேடவுரை, கருத்துரையும்.

சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் என்னும் இம்மூன்றும் முதனூல், வழிநூல், சார்புநூலென இருத்தல்போல் அந்நூல்களின் முடிபொருளாய்ப் பயனியலாயிருக்கும் பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளை அநுபவமாக உணர்த்துவது-திருத்தொண்டத் தொகையையும் திருத்தொண்டர் அந்தாதியையும் தொகை வகையாகக் கொண்டு விளங்கும் விரிநூலாகிய பெரியபுராணமே.

இப்புராணத்திற்கு காஞ்சி-ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் திருவிருத்தங்களிலுள்ள பதங்களை விடாமல் பொழிப்புரையாகவும் அப்பதங்களில் ஆழ்ந்துள்ள பொருள்களை விடாமல் விசேடவுரையாகவும் அப்பொருளில் உட்கிடையாய் விளங்கும் நுண்ணிய பொருள்களை கருத்துரையாகவும் செய்துள்ளார்.

அன்றியும் விரிநூலாகிய இப்புராணத்திற்கு முதனூல் திருத்தொண்டத்தொகையாகலான் அத்தொகையில் அடியார்களைத் தனித்தனியாகவும் தொகையாகவும் ஓதியருளத் தொடங்கிய ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் ஒவ்வொருவருக்கும் அடியேனென்றும் அடியார்க்கடியேனென்றும் ஓதியதற்குக் காரணங்களையும், வகைநூல் திருத்தொண்டர்

அந்தாதியாகலான் அவ்வந்தாதியில் வருந்திருக்கும் ஒவ்வோர் பதங்களைக்கொண்டே ஸ்ரீ சேக்கிழார் விரித்துரைத்தருளியிருக்கும் சீர்மையினையும், தொகை வகை விரியாகவும் முதனூல், வழிநூல், சார்புநூலாகவும் உள்ள இம்மூன்றினும் கூறிப்போந்தவற்றை சித்தாந்தாசாரியராகிய ஸ்ரீ உமாபதிசிவம் புராணசாரம் என அருளியுள்ளாராகலின் அச் சாரத்தின்கீழ் அப்புராணத்தின் சாரங்களையும் காட்டி இருக்கின்றார்.

ஆசிரியர் சேக்கிழார் கூறியருளிய பதங்களின் சாரங்களையும் அவற்றிலுள்ள மெய்ப்பொருளின் சாரங்களையும் தொண்டின் சாரங்களையும் அவற்றில் விளங்கும் மெய்ஞ்ஞான சாரங்களையும் அம்மெய்ஞ்ஞானங்களின் வழியே அங்குரித்துத் தோன்றி வளர்ந்து இலை, பூ, காய், கனியாகக்கிடக்கும் அன்பின் சாரங்களையும் விளக்கியுள்ள இச்சித்தாந்தபோத ரத்நாகர வுரை 1000 பாடல் (3 சருக்கம்) ராயல் பாரம் நூறு முன்னரே வெளியாயிருக்கின்றது. விலை ரூபா 6—8—0. நான்காவது சருக்கம் 1934௵ மார்ச்சு௴ தொடங்கி 5 பாரங்கொண்ட சஞ்சிகை ரூபமாக வெளிப்படுத்தி வருகின்றோம். விலை அணா 0—4—0 வருடச் சந்தா (உள்ளூர்) 2—8—0 வெளியூர் 3—0—0

இச்சித்தாந்தவுரை அவசியம் அச்சிட்டு வெளிவரக் கண்டு மகிழவேண்டுமென்பது சித்தாந்த சைவர் பலரும் விரும்புவ தொன்றாம். சுபம்.

இங்ஙனம்,
...ஏகாம்பரம் பிள்ளை,
19, ரண்டால்ஸ் சாலை,
வேப்பேரி, சென்னை.

Press, Madras.

உ

சிவமயம்

# பெரிய புராணம்

## மூலமும்

## அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

## வசனமும்

முற்றுப் பெற்றன !　　　　　முற்றுப் பெற்றன !!

*சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச் சுவை சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் போாற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.*

*இத்தகைய அரும்பெரு நூலின்* **மூலமும்,** *“நவசக்தி” ஆசிரியர், திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் எழுதிய* **அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும்,** *மாதந்தோறும் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிடப்பட்டு முற்றுப் பெற்றன.*

*மூலம், சுத்தமாக அச்சிடப் பெற்றிருக்கிறது; பற்பல ஓலைப் பிரதிகளைக் கொண்டு ஒப்பு நோக்கப்பட்டது. பொருந்திய பாடபேதங்கள் ஆங்காங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள், ஆராய்ச்சியாளர்க்குப் பெருந்துணை புரியும்.*

*பதஉரை யின்றியும், ஆசிரியரின்றியும் பெரியபுராணத்தை எவரும் எளிதில் பயிலும் முறையில் அரும்பதக் குறிப்புரை வரையப்பட்டிருக்கிறது. விசேட உரை, தமிழ் பயில்வோர்க்கு இன்பு ஊட்டும். ஆராய்ச்சிக் குறிப்புகள், சரித்திர உலகுக்குப் பெரிதும் பயன்படும்.*

*வசனம் எளிய நடையில் எல்லோர்க்கும் பயன்படும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. பல அங்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ள பெரிய புராணப் பதிப்பு இஃதொன்றே யாகும்.*

**1250 பக்கங்கொண்டது. கலிகோ பயிண்டு**

**விலை ரூபா 7.**

**காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,**

**12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.**

## மதிப்புரை

பெரியபுராணம் சித்தாந்தபோத ரத்ந
சைவ சித்தாந்தப் பேரறிஞராக விளங்கிய காலஞ்சென்ற
ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. அ
அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. இவ்வுரையில் மூன்று
கள் இதுவரை வெளிவந்துள்ளன. நான்காவது சருக்கம் ச
யாக வெளியிடப்படுகின்றது. இதுபற்றிய அறிக்கையை மற்றோ
ரிடத்திற் காண்க. சைவசித்தாந்த நுட்பங்கள் எண்ணிறந்தன சேக்கிழார் பெருமான் திருவாக்கில் முத்துக்கள்போல பொதிந்து கிடக்கின்றன. இரத்நாகரத்தில் (Indian Ocean) மூழ்கி முத்துக் குளிப்பவர்கள் முத்துக்கொணர்வதுபோல இவ்வுரையாசிரியர் தமது சித்தாந்தபோத இரத்நாகரத்தில் மூழ்கி, சைவசித்தாந்த முத்துக்களை யெல்லாம் எடுத்துக் கோவை செய்துள்ளது பெரிதும் போற்றத்தக்கது. இதுவரையில் இவ்வளவு விரிவான சிறந்த உரை வெளிவந்ததில்லை. சித்தாந்தப் பயிற்சி அருகிவரும் இந்நாளில் இத்தகைய உரை வேறொன்று வருமென்று எதிர்பார்ப்பதற்குமில்லை. எனவே சைவசித்தாந்தப் பற்றுடைய நமது நேயர்கள் ஒவ்வொருவரும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம்.

---

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# பெரிய புராணம்

**சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு**

இப்பதிப்பில் பெரியபுராணத்தின் மூலம் செம்மையாகவும் திருத்தமாகவும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு செப்பஞ் செய்யப் பெற்று அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. சேக்கிழார் வரலாறு, காலஆராய்ச்சி, நாயன்மார் அட்டவணை, அரும்பொருள் அகராதி, சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் திருவந்தாதி, புராணசாரம், **இதுவரை எந்தப் பதிப்பிலும் வெளிவராத பாட்டு முதற்குறிப்பகராதி** முதலியன இப்பதிப்பில் விளங்குகின்றன.

தனிப்பிரதி விலை ரூ. 1— 6—0

ரிஜிஸ்தர் தபாற்கூலி 0—10—0

ஆறுபிரதிகள் விலை ரூ. 7— 8—0 தபாற்கூலி வேறு.

**பன்னிரு திருமுறைகள்** :—சமாஜப் பதிப்பு ரயில்வே பார்சல் மூலம் அனுப்பத் தபாற்கூலி விலையுட்பட ரூ 6/ (ரயில்சார்ஜ்மட்டும் வாங்குவோர் செலுத்தவேண்டும்.)

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.